விலை: 50.00 Viber : 076 636 3378

பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 28 புதன்கிழமை (12.08.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 237



கல்யாண மாலை

[சர்வதேச திருமண சேவை]

T.P: 021 720 1005



இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Email:Kalyanamalai.jaffna@gmail.com

பதிவுக்கட்டணம் 1000/= + 300/= மட்டுமே


## காணாமல் ஆக்கப்பட்ட மகனைத் தேடி வந்த

### மற்றுமொரு தாய் முல்லையில் மரணம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடி வந்த மற்றுமொரு தாய் உயிரிழந்துள்ளார்.

இதில் முல்லைத் 23

## முன்னாள் போராளி மீது வவுனியாவில் தாக்குதல்

### பணமும் அபகரிப்பு

(வவுனியா)

வவுனியாவில் முன்னாள் போராளி மீது இனந் தெரியாதோர் நடத்திய 23

## மேர்வின் சில்வாவின் மகன் கைது

(கொழும்பு)

கொழும்பு, பத்தரமுல்ல பகுதியில் தொழிலதிபர் ஒருவருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்த குற்றச்சாட்டு தொடர்பாக முன்னாள் அமைச்சர் மேர் 23

## விடத்தல்பளையில் ஒருவருக்கு கொரோனா

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் ஆய்வு கூடத்தில் நேற்று செவ் வாய்க் கிழமை நூறு பேருக் கான கொரோனாத் தொற்றுப் பரி சோதனைகள் நடத் தப் பட் டுள் ளதாக 23

### மாற்று வியூகத்தால் தமிழர்களை வென்றோம்

# தமிழர்களின் ஏக பிரதிநிதி கூட்டமைப்பினர் அல்லர்

## பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

மாற்று வியூகத்தால் தமிழர்களை வென்று பொதுத் தேர் தலில் யாழ்ப்பாணத்தில் இரு ஆசனத்தைக் கைப் பற்றியுள்ளோம். தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அல்லர்.

எனவே அவர்களுடன் எவ்வித பேச்சுக் கும் தயாரில்லை என பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் துப்பாக்கிச் சூடு ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கொழும்பு முல்லேரியா பகுதியில் நேற்று பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட் டில் பல குற்றங்களுடன் தொடர் பில் தேடப்பட்டு வந்த பிரபல பாதாள உலகக் குழுவின் உறுப்பினர் ஒருவர் உயிரிழந்துள்ளார். 23



## நாட்டின் முழு நிர்வாகமும் இராணுவத்தின் கைக்குள்

### ஏற்க முடியாது என்கிறார் எம்.ஏ.சுமந்திரன்

(கொழும்பு)

மாவட்ட செயலகங்கள் மற் றும் பிரதேச செயலகங்களை பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு செல்வ தானது நாட்டின் நிர் 23

## வவுனியாவில் விபத்து முதியவர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியாவில் நேற்று பிற் பகல் இடம்பெற்ற விபத்தில் முதிய வர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த முதியவர் பயணம் செல்லும் 23

## கூட்டமைப்பை பிரிக்கும் நோக்கம் ஏதும் இல்லை

### ரெலோ தலைவர் அடைக்கலநாதன்

(வவுனியா)

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பில் இருந்து பிரிந்து தனித்து செயற்படவுள்ளதாக வெளியான செய்திகள் உண்மை க்கு புறம்பானவை என 23

## தனிமைப்படுத்தலிலிருந்த சிறைக் கைதி யாழ்.போதனாவில் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் இருந்து கடல் வழியாக வந்து யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குள் தனிமைப் படுத்தப்பட்டிருந்த ஈழ அகதி யாழ் போதனா வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டு சில மணி நேரத்திலேயே உயிரிழந் துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் வல் வெட்டித்துறை பகுதியைச் சேர் ந்த 52 வயதுடைய ஒருவரே உயிரிழந்தவராவார்.

இந்தியாவிலிருந்து கடல் வழியாக சட்ட 23

### 19ஆவது திருத்தம் நீக்கினாலும்

## ஜனாதிபதியின் பதவிக் காலத்தில் மாற்றம் வராது – பசில்

(கொழும்பு)

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டம் நீக்கப்பட்டாலும் ஜனாதிபதியின் பதவிக்காலம் நீடிக்கப்படாது என பொதுஜன பெரமுன 23

## நீர்வேலியில் கடத்தப்பட்டதாக கூறப்பட்ட இளம் யுவதி

### மல்லாகத்தில் காதலனுடன் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீர்வேலி வடக்கு பகுதியில் வானில் கடத் தப்பட்டதாகக் கூறப்படும் யுவதி கோப்பாய் பொலிஸா ரால் நேற்று மாலை 23

## நாட்டில் டெங்கு பரவும் அபாயம்

### பொதுமக்களுக்கு எச்சரிக்கை



05ஆம் பக்கம் பார்க்க


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கண்ணீர் அஞ்சலி



அமரர்

## மாலினி பாஸ்கரன்

(முல்லைத்தீவு மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்)

அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆன்மா இறைவனின் சந்நிதியில் இளைப்பாற இறைவனை வேண்டுகின்றோம்.

(3556)

**யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள்**

# UNIVERSITY OF JAFFNA,SRI LANKA
## FACULTY OF ENGINEERING
## WALK - IN – INTERVIEW

Walk in interview for appointment to the following two posts will be held on **17.08.2020** from **9.00 a.m.** to **11.00 a.m.** at the Board room, Faculty of Engineering, University of Jaffna,Ariviyal Nagar, Kilinochchi.

**1.**Post 1: Temporary Research Assistant
**2.**Post2: Temporary Instructor in Mechanical & Process Engineering / Engineering Mathematics / Civil Engineering / Electrical and Electronic Engineering / Computer Engineering.

1. **The candidates for Temporary Research Assistant are expected to**

- Helping to identify business requirement of software and automation projects and prepare proposals for projects.
- Helping to design, develop and execute automation activities using Office 365 applications.
- Ability to create detailed, comprehensive and well-structured test plans and test cases.
- Ability to handle basic SQL operations.
- Help to identify, record, document thoroughly and track bugs.
- Assist. dean's office for further development.
- Any other direction given by the Dean.

**3.Temporary Instructor in Mechanical & Process Engineering / Engineering Mathematics / Civil Engineering/ Electrical and Electronic Engineering / Computer Engineering are expected to**

- work with very cordial academic staff, and perform research and significantly improve their design skills in professional level.
- prepare and conduct laboratory experiments.
- Assist. lecturers to conduct undergraduate programme.

2. **Required qualifications for both Categories**

- A UGC recognized Four Year Engineering Degree.
- Candidates, who completed the engineering degree program and awaiting the results of the final examinations, may also apply for the above mentioned posts.

**SALARYSCALE –**

1. Temporary Research Assistant
   Rs. 49,860 (Fixed)
2. Temporary Instructor
   Rs. 40,920/- (Fixed)

Candidates are requested to submit scan copy of the relevant certificates, NIC and **self-prepared applications** (Curriculum vitae) by email to the following email address, **judy@eng.jfn.ac.lk.** This should be done on or before 4p.m on 16th August 2020. Any clarification, please contact office phone number **021 206 0161.** When the candidates attend to the interview, they should bring the originals.

**Registrar**
**University of Jaffna**
**11.08.2020**

(C-022)

# முதலாம் ஆண்டு நினைவு தின அழைப்பு



சொலத்தூன் நகர் சுவிஸ்லாந்தில் கடந்த 26.07.2019 வெள்ளிக்கிழமை அன்று இறைபதமடைந்த எமது அன்பு மகன்

அமரர்

## ஜெகதீஸ்வரன் சயந்தன்

(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)


அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினம் இன்று (12.08.2020) புதன்கிழமை பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(3549)

**கலாசாலை வீதி,**
**திருநெல்வேலி.**

**க. ஜெகதீஸ்வரன் குடும்பத்தினர்**
**தொடர்புகளுக்கு : 077 525 0980**

# மரண அறிவித்தல்



## கணபதிப்பிள்ளை சிவகுரு

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1950.11.25 | 2020.08.11 |

வேல் கோயிலடி இன்ப சிட்டி, பருத்திறையைப் பிறப்பிடமாகவும் கலப்பனாவத்தை தும்பளை பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சிவகுரு நேற்று (11.08.2020) செவ்வாய்க் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பருவதம் தம்பதியினரின் அன்பு மகனும் இராமலிங்கம் - பாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவலிங்கம், சிவசாமி, அன்னபூரணி, உருத்திரன், அருளானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராமச்சந்திரன், இராசநாயகம் ஆகியோரின் மைத்துனரும் ஆனந்தரூபன், ஆனந்தகுமாரி, ஆனந்தரூபி, ஆனந்தஜெகன், ஆனந்தஜெசிந்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும் வைரமுத்து, யோகராணி, சிவசோதி, மகிழ்னகுமார், பூர்ணிமா ஆகியோரின் அன்பு மாமனாரும் தாருண்யா, மதுராங்கனி, கனிஷியா, கிரிஷாந், எதிஷன், நிதுஷா, கிருஷிகா, கருஷிதன், அக்ஷயா, சிவாணி, சபிதா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.08.2020) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் தும்பளை பருத்தித்துறையில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-028)

**பருத்தித்துறை**

**தகவல்:-**
**குடும்பத்தினர்**
**077 400 2902**



# மணிவிழா வாழ்த்து

## திருமதி. அருட்செல்வி திருச்செல்வநாதன்

(பகுதித்தலைவர், பொறுப்பாசிரியர்-ஆலோசனையும் வழிகாட்டலும்.) SLTS-1

**யாழ்.யாழ்ப்பாணம்.இந்து மகளிர் கல்லூரி**

### சேவை விபரம்

| | |
|---|---|
| யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணியம் மகளிர் வித்தியாலயம் | :- 20.01.1986-31.12.1996 |
| யா/திருக்குடும்ப கன்னியர் மடம் மகா வித்தியாலயம் | :- 01.01.1997-15.01.2008 |
| யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி | :- 16.01.2008-11.04.2020 |

ஆசிரியப் பணி தனில் அர்ப்பணிப்பாய் சேவையாற்றி
இணையறா சேவைதனில் இன்புடன் பணியாற்றினீர்
ஏணிப்படிகளாய் இருந்தே - மாணவர்
எண்ணிய துறையில் உயர்ந்திட உழைத்தீர்!

மாணவர்கள் மனங்கள் மகிழ்வாய் அமைந்திட- நாளும்
"மகிழ்வகம்" தனிலே நெகிழ்வாய் பணியாற்றினீர்
அல்லற்படும் மாணவர் மனங்களை ஆற்றுப்படுத்திட
ஆலோசனை வழிகாட்டியாய் அறிவுரை புகட்டினீர்

இன்னல்கள் கண்டு இளைத்திடவில்லை- மாணவர்
துயரங்கள் சுமந்து துவண்டிடவில்லை
மாணவர்கள் உணர்வுகள் புரிந்தே- நல்
உளநலம் பகிர்ந்தீர்

அர்ப்பணிப்பாய் அரும்பணியாற்றினீர்
நிர்க்கதியான மாணவர் நெஞ்சங்களுக்கு நிம்மதியளித்தீர்
இனிமையாய்க் கதைத்து இரகசியம் காத்தீர்-நாளும்
புன்னகை தவள புதுப்பொலிவுடன் பணியாற்றினீர்

இனிதாய் அமைந்த இல்லற வாழ்வு இனிதே சிறந்தோங்கட்டும்
மகத்தான மக்கட் பேறு வாழ்வு மாண்புடன் மிளிரட்டும்
ஆயுள் ஆரோக்கியம் சிறந்திட இறைவன் அருள்பாலிக்கட்டும்
பல்லாண்டு காலம் நலமோடு வாழ வாழ்த்துகின்றோம்

Best Wishes

வாழ்த்துவோர்:
ஆசிரியர் கழகம்
யாழ்.இந்து மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(C-018)

# மணிவிழா வாழ்த்து



## திருமதி சோபனா பிருகதீஸ்வரன்

(பகுதித்தலைவர், பாட இணைப்பாளர் ஆங்கிலம்) SLTS-1

**யாழ்.யாழ்ப்பாணம்.இந்து மகளிர் கல்லூரி**

கல்விக்கடலின் கலங்கரை விளக்காய்
காலமெல்லாம் ஒளி கொடுத்தீர்
ஆங்கில பாடமதில் அடைவு மட்டம் உயர்ந்திடவே
அயராது பள்ளியிலே உம் பணி தொடர்ந்தீர்

இன்சொல் பேசியும் இளநகை உதிர்த்தும்
அமைதியே உருவாய் அழகாக பயணித்தீர்
கூடியே தளம் அமைத்து உம் குழாத்தினை வழிப்படுத்தி
கருத்துக்கள் பகிர்ந்தே கண்ணியமாய் செயற்பட்டீர்

ஆங்கில தினமதின் அர்த்தங்கள் புரிந்திட
அத்தனை நிகழ்வும் அழகாய் வடிவமைத்தீர்
போட்டி நிலைகளில் மாணவர் சாதனை புரிந்திட
புத்தி சாதுர்யமாய் களம் அமைத்தீர்

பகுதித் தலைவர் பணியதை நாளும்
பண்புடன் தொடர்ந்தீர் - மாணவர்
நலனில் அக்கறை கொண்டே அவர் நற்சான்றுதனை
நயப்புடன் நன்றாய் வரைந்து கொடுத்தீர்

அகவையில் அறுபது கழிகிறது
அகிலத்தில் உம்புகழ் மிளிர்கிறது
வேர்விட்டு விழுதுகள் எறிந்து
விருட்சமாய் நிற்கிறது உம் வாழ்வு

இனிமையாய் அமைந்த இல்லற வாழ்வு
இனிதே நாளும் தொடரட்டும்
நல்லருள் நிறைந்த இறையருள்
வாழ்வு தொடர
பல்லாண்டு காலம் பகலவன் போல்
வாழ வாழ்த்துகின்றோம்


### சேவை விபரம்

| | |
|---|---|
| மன்/அல்-மினா ம.வி | :- 02.05.1983 - 31.07.1991 |
| யா/அராலி இந்துக் கல்லூரி | :- 01.08.1991 - 02.03.1993 |
| பலாலி ஆசிரியர் கல்லூரி | :- 03.03.1993 - 31.12.1994 |
| யா/அராலி இந்துக் கல்லூரி | :- 01.01.1995 - 02.05.1995 |
| யா/கொழும்புத்துறை சென் ஜோசப் வித்தியாலயம் | :- 03.05.1995 - 31.05.2001 |
| யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம் | :- 01.06.2001 - 28.02.2002 |
| யா/சன்மார்க்க மகா வித்தியாலயம் | :- 01.03.2002 - 13.06.2010 |
| யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி | :- 14.06.2010 - 12.08.2020 |

வாழ்த்துவோர்
ஆசிரியர் கழகம், யாழ்.இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

# சமூகத்திற்கு கொரோனா கொத்தணி ஏற்படும் அபாயம் நீங்கவில்லை

## தொற்றுநோய் விஞ்ஞானப்பிரிவு எச்சரிக்கை



(கொழும்பு)

**சமூகத்திற்குள் கொரோனா கொத்தணி ஏற்படும் ஆபத்து இன்னமும் நீங்கவில்லை என தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

பொதுமக்கள் உரிய சுகாதார ஆலோசனைக்கு அமைய தினமும் செயற்பட வேண்டும் என தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

சுகாதார ஆலோசனைக்கு அமைய செயற்படுவதன் மூலம் கொரோனாத் தொற்று சமூகத்திற்குள் பரவுவதனை தவிர்க்க முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாத்திரம் 27 புதிய கொரோனா நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதற்கமைய நாட்டில் இதுவரையில் 2 ஆயிரத்து 871 பேர் கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## கலாநிதி அனுஷியா சத்தியசீலன் கல்வியியல் துறை பேராசிரியராக நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி அனுஷியா சத்தியசீலன் கல்வியியல் துறைப் பேராசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நீண்ட காலமாக யாழ்.பல்கலைக்கழக கல்வியியல் துறைத் தலைவராகவும் கல்வியியல் முதுமாணி, முதுதத்துவமாணி, கலாநிதி பட்டப்படிப்புக்களை மேற்பார்வை செய்பவராகச் செயற்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இவர் தமிழகத்தில் உள்ள அழகப்பா பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டம் பெற்றவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-3)


## University of Jaffna

**Request for Expression of Interest (EOI)**

**Consultancy Service for setting up a Sound Studio of Ramanathan Academy of Fine Arts, University of Jaffna.**

The Competent Authority, on behalf of the Department Procurement Committee now invites Expression of Interest from firms/ Individuals to provide Consultancy Service (Design& Supervision) for setting up a Sound Studio of Ramanathan Academy of Fine Arts **(RAFA)**, University of Jaffna at Maruthanarmadam.The purpose of this project is to modify the existing building structure (Floor area-850 Sq. Feet) to fit for the Sound Studio and supply, installation, testing and commissioning of necessary equipment and furniture for Studio of the Ramanathan Academy of Fine Arts **(RAFA)**, University of Jaffna at Maruthanarmadam. This project is financed by Estate of late Kandiah Karthigaesan Trust fund.

Interested firms/ Individuals may obtain the EOI document from **Deputy Registrar, Capital Works & Planning, University of Jaffna** or download it from the website of the University of Jaffna- **www.jfn.ac.lk.**

The EOI's shall be submitted with supporting documents to Deputy Registrar, Capital Works & Planning, University of Jaffna, Thirunelvely, Jaffna by post or in person to reach his office on or before 2.00 p.m. on 26th August, 2020. For any clarification, you may contact:- **Deputy Registrar/ Capital Works & Planning, University of Jaffna (T/P No: 021 221 9201).**

**Competent Authority,**
**University of Jaffna,**
**Post Box. 57,Thirunelvely,Jaffna**
**Date :11.08.2020**

(C-021)


## தேசிய அடையாள அட்டைக்கு இம்மாத இறுதிக்குள் விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

2020 க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களில் சுமார் ஒரு இலட்சம் பேர் இதுவரை தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவில்லை யென ஆட்பதிவுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த வருடம் டிசெம்பர் மாதம் சாதாரணதரப் பரீட்சை நடைபெறவுள்ளது.

ஆண்டுதோறும் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்ற 3 இலட்சத்து 50 ஆயிரம் வரையான மாணவர்கள் விண்ணப்பிப்பது வழக்கம்.

இந்த வருடத்தில் இதுவரை 2 இலட்சத்து 50 ஆயிரம் விண்ணப்பங்களே பெறப்பட்டுள்ளன.

பரீட்சைக்கு தோற்றவுள்ளவர்கள் ஓகஸ்ட் 31 ஆம் திகதி க்கு முன்பாக விண்ணப்பிக்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ஜ-4)

## மேர்வினின் மகனை கைது செய்ய சிறப்பு பொலிஸ்குழு நியமனம்

(கொழும்பு)

கொழும்பு, பத்தரமுல்ல பகுதியில் தொழிலதிபர் ஒருவருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்த குற்றச்சாட்டுக்காக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா வின் மகன் மாலக சில்வாவை கைது செய்ய பொலிஸ் சிறப்புக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மாலக சில்வாவை கைது செய்ய தலங்க பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று நேற்று முன்தினம் நுகேகொடையில் உள்ள மேர்வின் சில்வாவின் இல்லத்திற்கு சென்றிருந்தது.

எனினும் இதன்போது மேர் வின் சில்வாவும் அவரது மகன் மாலக சில்வாவும் அந்நேரத் தில் வீட்டில் இல்லாத நிலையில் பொலிஸ் சிறப்புக் குழு சோதனைகளை ஆரம்பித்துள்ளது.

பத்தரமுல்லை பகுதியைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் அளித்த முறைப்பாட்டுக்கு அமைவாகவே மாலக சில்வாவை கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ஜ-4)

## கடமைகளை ஆரம்பித்தார் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ



(கொழும்பு)

புதிய பிரதமரான மகிந்த ராஜபக்ஷ அலரிமாளிகையில் நேற்று தனது கடமைகளை ஆரம்பித்தார்.

மத வழிபாடுகளுடன் ஆர ம்பமான இந்த நிகழ்வில் மதத்தலைவர்கள், அரசியல் முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட பெருந்திரளானோர் கலந்து கொண்டிருந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வரலாற்றுச் சிறப்புமிக்க களனி ரஜமஹா விகாரையில் வைத்து மகிந்த ராஜபக்ஷ இல ங்கையின் 13 ஆவது பிரதமராக ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ முன் பதவியேற்றிருந்தார்.

இந்த நிலையிலேயே நேற்று அவர் தமது கட்மை களை ஆரம்பித்துள்ளார்.

மேலும், குருநாகல் மாவட்டத் திலிருந்து இம்முறை பொதுத் தேர்தலில் போட்டியிட்ட மகிந்த ராஜபக்ஷ 5 இலட்சத்து 27 ஆயிரத்து 364 முன்னுரிமை வாக்குகளைப் பெற்றுள்ளமை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# இராசிபலன்

12.08.2020
ஆடி 28, புதன்கிழமை
அட்டமி முற்பகல் 9.28 மணிவரை
கார்த்திகை பின்னிரவு 2.24 மணிவரை
சுபநேரம் 04.34 - 6.04 மணிவரை
இராகுகாலம் 12.04 - 1.34 மணிவரை
சந்திராஷ்டமம்- சித்திரை, சுவாதி

வளவன்

**மேஷம்**
பணத்தேவைகள் பூர்த்தியாகும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், காலைப் பொழுதில் கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**ரிஷபம்**
உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், கற்பனை மிகுதியான நாள், உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும்.

**மிதுனம்**
எடுத்த செயலை முடிக்க ஒருமுறைக்கு பல முறை அலைய நேரிடலாம், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும்.

**கடகம்**
வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலை ஒன்றை நீங்கள் எளிதாக செய்து முடிப்பீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தில் மங்கல நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, கொடுத்த வாய்ப்பை காப்பாற்றி மகிழ்வீர்கள், தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**கன்னி**
மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், அதிகம் செலவாகும் என நினைத்த காரியம் நல்ல விதமாக அமையும், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்**
ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, சில பிரச்சினைகளை கண்டும் காணாமல் இருப்பது நல்லது, பிரயாண பயம் உண்டு, கௌரவக் குறைவான நாள்.

**விருச்சிகம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், கடன்சுமை குறைய வழிவகை செய்வீர்கள், பணத் தேவைகள் பூர்த்தியாகும், செய்தொழில் மேன்மையுண்டு.

**தனுசு**
வியாபார விரோதம் விலகும், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், ஆரோக்கியமான நாள்.

**மகரம்**
பிள்ளைகளின் நீண்டநாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், வீட்டு உபயோக பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, போட்டியாக செயற்பட்டவர்கள் மனம்மாறுவர்.

**கும்பம்**
வளர்ச்சி பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பெற்றோர் மீது பிரியம் கூடும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், சுப விரயங்கள் கூடும் நாள்.

**மீனம்**
பகை விலகி பாசம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், தொழில் முயற்சியில் எதிர்பார்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.

உலகத்திலேயே தலைசிறந்த ஆசிரியர் அனுபவம் தான்

# நாட்டில் டெங்கு பரவும் அபாயம்!

## மீண்டும் விடுக்கப்பட்டது எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

**நாட்டில் டெங்குநோய் பரவும் அபாயம் அதிகரித்துள்ளது என தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு மீண்டும் எச்சரித்துள்ளது.**

நுளம்புகள் பரவக்கூடிய இடங்களை முடிந்தளவு சுத்தமாக வைத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் அருண ஜெயசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது நிலவும் சீரற்ற வானிலையால் டெங்கு நோய் பரவல் அதிகரிக்கும் வாய்ப்புக்கள் உள்ளன.

எனினும் இதுவரை டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சுட்டிக்காட்டத்தக்க அளவு அதிகரிக்கவில்லை.

எனினும் தற்போது நாட்டில் பரவலாகப் பெய்து வரும் மழைவீழ்ச்சியினால் டெங்கு நோய் பரவலுக்கான வாய்ப்பு அதிகம் உள்ளது.

எனவே சகல மக்களும் தத்தமது சுற்றாடலை முடிந்தளவு சுத்தமாகவும் நோய்ப்பரவலை ஊக்கப்படுத்தும் காரணிகளை அகற்றுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் இவ்வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் நாட்டில் 24 ஆயிரத்து 535 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)


# தங்கம்மா முதியோர், இல்லம் புதுக்குளம், கனகராயன்குளம், வவுனியா

**ஆண், பெண் முதியவர்களுக்கான இலவச வதிவிடம்**

தங்கம்மா முதியோர் இல்லம் நவீன வசதி கொண்ட புதிய மண்டபம் அண்மையில் கட்டப்படவுள்ளது.இதனால் வயோதிப ஆண்களுக்கும் வயோதிப பெண்களுக்குமான இட வசதி உண்டு

**நிபந்தனைகள்**

1) எதுவித வாழ்வாதாரமும் அற்றவராக இருக்க வேண்டும்
2) 55 வயதிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.
3) கடுமையான நோயாளிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டார்கள்.
4) உணவு. உறைவிடம் அன்றாட அத்தியாவசியப் பொருட்கள் அடிப்படை மருத்துவ வசதிகள் இலவசமாக வழங்கப்படும்.

**முக்கிய குறிப்பு:-**

1) நவீன வசதிகள் கொண்ட தனியான அறைகள் குறைந்த பட்ச வாடகைக்கு விடப்படும். அவர்களுக்கும் மேற்கூறப்பட்ட சகல வசதிகளும் இலவசமாக வழங்கப்படும்.


2) கடந்த இரண்டு வருடங்களாக பிறந்த தின வைபவங்கள்,அந்தியேட்டி கிரியைகள், நினைவு தினங்கள் போன்றவற்றை உரியவர்களின் பங்களிப்புடன் பூசை உணவுகளுடன் இங்குள்ள முதியவர்களுக்கு வழங்குகின்றோம். பங்களிப்பு செய்ய விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும். (C-025)

**தொடர்புகளுக்கு:-** ஸ்தாபகர், Dr.குணசிங்கம் - 076 248 2766
முகாமையாளர், தெ.தவராசா - 077 449 9619
நிர்வாக உத்தியோகத்தர், பு.விதுஷனா - 077 616 5505



# 31ஆம் நாளில் நினைவு கூருகின்றோம்

அமரர்
**நடேசு செந்தில்வடிவேல்**
(ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர்,பரந்தன்)
(B.A. Hons.PGDE- merit M.A. in Edu)



கடந்த 13.07.2020 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் நடேசு செந்தில்வடிவேல் அவர்களின் இன்றைய வீட்டுக்கிருத்திய நிகழ்வில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 21.07.1964
மறைவு 13.07.2020


(3542)

குடும்பத்தினர்
சகோதர,சகோதரிகள்

274, உதயநகர்,
கிளிநொச்சி.

தொடர்பு:- 077 770 5101, 076 327 7600

# தங்கத்தின் விலை சற்று சரிவு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஆபரணத் தங்கத்தின் விலை, நேற்று முன்தினமும் நேற்றும் சற்றுக் குறைவடைந்துள்ளது. நேற்று செவ்வாய்க்கிழமை பவுணுக்கு 500 ரூபாயால் குறைவடைந்துள்ளது.

கொரோனா வைரஸ் நோய்த் தொற்று காரணமாக சர்வதேச பொருளாதார சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள மாற்றம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் தங்கத்தின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

கடந்த ஜூலை 22 ஆம் திகதி 24 கரட் தங்கத்தின் விலை ஒரு பவுணுக்கு ஒரு இலட்சம் ரூபாயை எட்டியது.

அதனைத் தொடர்ந்து தங்கத்தின் விலை படிப்படியாக உயர்ந்து ஜூலை 31ஆம் திகதி ஒரு லட்சத்து 4 ஆயிரம் ரூபாயைக் கடந்தது.

மேலும் விலை தொடர்ந்து அதிகரித்த நிலையிலேயே உள்ளது. இவ்வாறு நாளுக்கு நாள் அதிகரித்து வந்த தங்கத்தின் விலை நேற்று முன்தினம் ஆயிரம் ரூபாயால் குறைவடைந்தது.

நேற்று மேலும் 500 ரூபாயால் குறைவடைந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை 22 கரட் ஆபரணத் தங்கத்தின் விலை 99 ஆயிரத்து 450 ரூபாய்க்கு விற்பனையாகியது.

நேற்று முன்தினம் ஒரு பவுண் ஆபரணத் தங்கம் 99 ஆயிரத்து 900 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. 24 கரட் தூய தங்கத்தின் விலை பவுண் ஒன்று ஒரு இலட்சத்து 8 ஆயிரத்து 500 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. நேற்று முன்தினம் திங்கட்கிழமை 24 கரட் தூய தங்கத்தின் விலை பவுண் ஒன்று ஒரு இலட்சத்து 9 ஆயிரம் ரூபாயாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5-8)

## நகைக்கடையில் மோதிரத்தை வாய்க்குள் வைத்து வசமாக மாட்டிய பெண்

# பொலிஸாரால் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரப் பகுதியில் அமைந்துள்ள நகைக்கடை ஒன்றில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரண்டு மோதிரங்களைத் திருடிய குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, திருகோணமலையைச் சேர்ந்த குறித்த பெண் தனது நண்பருடன் சாவகச்சேரி பகுதிக்கு வந்து அங்குள்ள நகைக்கடை ஒன்றிற்கு சென்று நகைகளை கொள்வனவு செய்ய வந்தது போல் பாசாங்கு செய்துள்ளார். நகைக் கடையில் நின்றவர்கள் அசந்த நேரம் இரண்டு மோதிரங்களை எடுத்து வாய்க்குள் போட்டுள்ளார்.

மோதிரங்கள் திருட்டுப் போனதை உணர்ந்த நகைக் கடை உரிமையாளர் உடனடியாக சாவகச்சேரி பொலிஸாருக்கு தகவலைத் தெரியப்படுத்தியுள்ளார்.

பொலிஸார் சோதனை செய்த போது குறித்த பெண் தனது வாய்க்குள் இருந்து மோதிரங்களை வெளியே எடுத்துள்ளார். பொலிஸார் அப்பெண்ணைக் கைது செய்துள்ளனர். (5-30)



சிறி சபாரத்தினம் அறக்கட்டளை நிலையத்தால் யாழ். உடுப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த முன்னாள் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் -ரெலோ போராளி ஒருவரின் மருத்துவச் செலவிற்காக 70 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டது. (படம்: சாவகச்சேரி செய்தியாளர்)

# ஆயுர்வேத மருத்துவப் பிரிவை மீள இயக்குமாறு மக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

தென்மராட்சி-சரசாலை பகுதியில் சாவகச்சேரி பிரதேச செயலகத்தின் உப பணிமனைக் கட்டடத்தில் நீண்ட காலமாக இயங்கி வந்த ஆயுர்வேத மருத்துவப் பிரிவை மீள இயக்க நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி பொதுமக்கள் தொடர்ச்சியாக கோரிக்கைகளை முன் வைத்து வருகின்றனர்.

இவ்விடயத்தை பிரதேச சபை உறுப்பினர் ரஜீபன் சாவகச்சேரி பிரதேசசபையின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில்,

சரசாலையில் நீண்ட காலமாக ஆயுர்வேத அலகு ஒன்று இயங்கி வந்த நிலையில் சில மாதகாலமாக அதன் சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

சரசாலை மக்களுக்கும், அயல் கிராம மக்களுக்கும் மிகவும் பயனுள்ள விதத்தில் அமைந்து காணப்பட்ட ஆயுர்வேத சேவைப்பிரிவு நிறுத்தப்பட்டமையால் குறிப்பாக முதியவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே பிரதேசசபை அதனை மீள அதே இடத்தில் இயக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார். உறுப்பினரின் கருத்திற்கு பிரதேச சபை நிர்வாகம் பதி லளிக்கையில்,

சபை எல்லைக்குள் வழமையாக இயங்கி வருகின்ற முக்கியமான ஆயுர்வேத பிரிவுகளுக்கே வைத்தியர் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

ஒரு வைத்தியர் இரு ஆயுர்வேத அலகுகளைக் கவனிக்க வேண்டிய நிலை காணப்படுகிறது எனத் தெரிவித்தனர்.

சாவகச்சேரி நகரசபையில் இயங்கி வந்த ஆயுர்வேதப் பிரிவும் கடந்த தை மாதத்தில் இருந்து மூடப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பாக நகரசபை உரிய அமைச்சு மற்றும் திணைக்களங்களுக்கு தெரியப்படுத்தியும் வைத்தியர் பற்றாக்குறையை காரணம் காட்டி தொடர்ச்சியாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-30)

# இலவச செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

சுய தொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் நோக்கில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் விதாதா வள நிலையத்தினால் கைகழுவும் திரவ சவர்க்காரம் தயாரித்தல் தொடர்பான இலவச தொழில்நுட்ப செயலமர்வு ஒன்று நாளை மறுதினம் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் தம்பசிட்டி பண்டாரி அம்மன் கோயில் வீதியில் மாலந்தனி முருகன் ஆலயத்திற்கு அண்மையிலுள்ள பருத்தித்துறை பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் பங்குபற்ற விரும்புவர்கள் அன்றைய தினம் கொவிட் -19 சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி இச் செயலமர்வில் கலந்து பயன்பெறுமாறு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (5)

# போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் மேம்படுத்தப்பட வேண்டும்

## ஜேர்மனிய குழுவிடம் யாழ். மாநகர உதவி மேயர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

ஜேர்மனிய கைத்தொழில் மற்றும் வர்த்தக மேம்பாட்டு விவகாரங்களுக்கான தூதுக் குழுவினர் ஏ.எச்.கே. லங்கா யாழ். மாநகர பதில் முதல்வர் துஈசனை கடந்த 29 ஆம் திகதி சந்தித்து கலந்துரையாடினர். இந்நிகழ்வில் யாழ். மாநகர ஆணையாளர் கலந்து கொண்டார்.

விசேட பிரதிநிதி Andreas தலைமையிலான தூதுக்குழுவினர் யாழ்ப்பாண மாவட்டத்தில் பின்னடைந்து காணப்படுகின்ற கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறைகளை விருத்தி செய்வதற்கு தேவையான ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளும் முகமாக தமது யாழ். விஜயத்தை மேற்கொண்டுள்ளதாகக் கூறினார்.

உள்ளூர் உற்பத்திகளை குறிப்பாக மீன்பிடி, விவசாயம் போன்ற துறைகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் உற்பத்திகளை பெருக்கி அதன் மூலம் யாழ்.குடாவில் இருந்து நேரடியாக ஏற்றுமதி செய்வதன் மூலம் வெளிநாட்டில் இருந்து நேரடியாக அந்நிய செலாவணியை பெற்றுக் கொள்ள முடியும்.

அத்துடன் அதிக வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்துவதோடு வெளிநாடுகளுக்கு நேரடியாக சந்தைப்படுத்தும் வாய்ப்புக்களையும் உள்ளூர் வர்த்தகர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

அத்துடன் உள்ளூர் வர்த்தகர்கள் எதிர்நோக்கும் சவால்களை போக்குவதற்குரிய பொறிமுறையை உருவாக்குவது பற்றியும் விளக்கமளித்தார்.

குறிப்பாக மீனவர்கள் மற்றும் விவசாயிகளுக்கு வேண்டிய பொருளாதார உதவிகள், தொழில்சார் பயிற்சிகளின் அவசியம் மற்றும் கரையோரப் பிரதேசங்களில் வசிக்கும் மீனவக் குடும்பங்களின் குடியிருப்பு வசதிகளை விரிவாக்கம் செய்வதன் அவசியத்தையும் குறிப்பிட்டிருந்தனர்.

இது தொடர்பாக ஜேர்மனிய தூதுக் குழுவினரிடம் கருத்து தெரிவித்த பதில் முதல்வர், எமது மாவட்டம் 30 வருட காலப் போரினால் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேச மாகும்.

இங்குள்ள மக்கள் தமது அடிப்படை வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர்.எனவே அம்மக்களுக்குரிய அடிப்படை வாழ்வாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் அவசியமாகும். அத்துடன் யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மீன்பிடித்துறை பொருளாதாரத்தில் பிரதான பங்கை கொண்டது.அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீன்பிடித்துறையில் விருத்தி செய்வதற்கு வேண்டிய அடிப்படைகளை குறிப்பாக வாழ்வாதாரம் மற்றும் குடியிருப்பு பிரதேசங்களில் காணப்படும் மக்கள் நெருக்கடியை குறைப்பதற்கு மாடி வீட்டுத் திட்டங்களை உருவாக்க வேண்டும்.

மீனவர்களுக்கு தொழில்சார் பயிற்சிகளை வழங்குதல் மற்றும் நவீன வகையிலான மீன்பிடி உபகரணங்களை வழங்குதல் அவசியமாகும்.

வடக்குக் கடலில் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடிப்பதால் எமது மீனவர்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றது. அதற்கு சுமுகமான தீர்வு காணப்பட வேண்டும்.

முல்லைத்தீவு மற்றும் கொக்கிளாய் பிரதேச கடற் பகுதியில் பெரும்பான்மையின மீனவர்கள் தங்கியிருந்து பாரிய இயந்திரங்கள் மூலம் மீன்பிடிப்பதால் எமது மீனவர்கள் பாரிய பிரச்சினைகளை எதிர் கொள்வதை தடுத்தல் வேண்டும்.

மற்றும் விவசாயத்தில் அதிக படியான வருமானம் ஈட்டக்கூடிய மண்வளம் பொருந்திய இடமான பலாலிப் பிரதேசமும் அதனை அண்டிய காணிகளிலும் படையினர் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதால் எமது மக்கள் குறிப்பாக விவசாயிகள் வாழ்வாதார பாதிப்பை எதிர்கொள்கின்றனர். இதற்குரிய தீர்வினை உடனடியாக காணுதல் வேண்டும் என்றும் தூதுக்குழுவினரிடம் பதில் முதல்வர் சுட்டிக்காட்டினார்.

பதில் முதல்வரின் கோரிக்கைகள் மிகவும் ஆக்க பூர்வமானவை என்றும் இதனை கவனத்தில் கொள்வதோடு தமது செயற்றிட்டத்தை செயற்படுத்தும் முறை அடிப்படையில் செயற்படுத்துவதற்கு மாநகர சபை வழங்கும் ஒத்துழைப்பிற்கு நன்றி கூறுவதுடன் தொடர்ந்தும் துறைசார் நிபுணர்களுடன் கலந்துரையாடி தமது திட்டத்தை செயற்படுத்துவதாகத் தெரிவித்தனர். (4-5)

# இலங்கையின் மிகச்சிறந்த ஆயுள் காப்புறுதி நிறுவனமாகக் கௌரவிக்கப்படுகின்ற AIA

**விளம்பர விபரணம்**

சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ள உலகளாவிய வங்கி மற்றும் நிதியியல் மதிப்பாய்வு (**Global Banking and Finance Review**) இதழினால் இலங்கையின் மிகச்சிறந்த ஆயுள் காப்புறுதி நிறுவனமாக 2019 இல் **AIA** ஸ்ரீலங்கா கௌரவிக்கப்பட்டதில் மிகவும் பெருமையடைகின்றது. இந்த கௌரவமிக்க அங்கீகாரமானது நிதியியல் துறை மற்றும் உலகப் பொருளாதாரத்தைப் பகுப்பாய்வு செய்கின்ற ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஊடக அதிகார மையம் ஒன்றினால் முக்கிய செயற்றிறன் குறிகாட்டிகளின் விரிவான மதிப்பீட்டினால் அவதானிக்கப்பட்டிருந்தது.

இந்த விருதானது உள்நாட்டு மக்களுக்கு சேவை வழங்கல், வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தல் மற்றும் மிகச்சிறந்த காப்புறுதித் திட்டங்கள் மற்றும் காப்புறுதிச் சேவைகளை வழங்கல் அடிப்படையில் ஆயுள் காப்புறுதித் துறைக்கு **AIA** ஸ்ரீலங்காவினால் மேற்கொள்ளப்பட்டுள்ள குறிப்பிடத்தக்க முக்கியமான பங்களிப்புகளுக்கானதொரு சான்றாகும்.

**AIA** ஸ்ரீலங்கா எப்போதும் தனது நிதி வலிமை மற்றும் ஸ்திரத்தன்மையினை உறுதியாகத் த்க்கவைத்திருப்பதுடன், அதனை வினைத்திறனாகவும் பேணி வருகின்றது. சமீபத்தைய கொவிட்19 பெருந்தொற்று **AIA** ஸ்ரீலங்கா மிகவும் உறுதியாகவும், நிலைபேறாகவும் தன்னை நிர்மாணித்திருக்கின்றது என்பதையே நிரூபித்திருந்தது.

**AIA** ஸ்ரீலங்கா எப்போதும் வாடிக்கையாளரை மகிழ்விப்பதையே நோக்காகக் கொண்டுள்ளது. அதாவது நிறுவனம் கடந்த 30 வருடங்களாக காப்புறுதிதாரர்களின் பங்குலாபங்களின் வாக்குறுதியளிக்கப்பட்ட வீதத்தினை விடச் சிறந்த வீதங்களையே அவர்களுக்கு வழங்கியமைக்கான கடந்த காலச் சாதனைகளுடன், வாடிக்கையாளரின் எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்வதில் தொடர்ந்தும் முன்னேற்றகரமான போக்கையே கொண்டிருக்கின்றது. நிறுவனத்தினுடைய முன்னோடியான டிஜிட்டல் மயமாக்கல் முயற்சிகள் மற்றும் வியாபாரத்தை இலகுவாக மேற்கொள்வதில் கவனம் செலுத்தல் நடவடிக்கைகள் போன்றன நிஜமான வாடிக்கையாளர் நோக்கத்தை நிறைவு செய்கின்ற காப்புறுதி வழங்குநராகத் திகழ்வதில் தனது நற்பெயரை மேலும் ஸ்திரப்படுத்தியிருக்கின்றது.

இலங்கை இருதயச் சங்கம், இலங்கைப் புற்றுநோய்ச் சங்கத்துடனான கூட்டாண்மை, நாடு முழுவதிலுமுள்ள மிகவும் பின்தங்கிய பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகளைப் புதுப்பித்தல், பொசன் காலத்தில் உயிர்களைப் பாதுகாத்தல், அல்லது உயர்கல்விப் புலமைப்பரிசில்கள் என எதுவாக இருந்தாலும், மிகவும் தாராள மற்றும் அன்பான மனப்போக்கைக் கொண்ட மற்றும் சமூகத்திற்கு எப்போதும் சேவைகளை வழங்குவதில் முன்னுரிமை அளிக்கின்ற நிறுவனமொன்றாகவே **AIA** ஸ்ரீலங்கா திகழ்கின்றது.

கொவிட் பெருந்தொற்றின் போது, நிறுவனம் கொவிட் நோயாளர்களைப் பராமரிக்கும் வைத்தியசாலை ஒன்றிற்கு மிகவும் அவசியமான தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை (**PPE**) அன்பளிப்புச் செய்திருந்ததுடன், மேலும் பெருந்தொற்றினைக் கையாள்கின்ற மூன்று பிரதான வைத்தியசாலை ஊழியர்களுக்கு இலவசமான ஆயுள் காப்புறுதிக் காப்பீட்டை வழங்குவதற்கு மேற்கொண்டிருந்த நடவடிக்கைகளையும் இதன்போது ஞாபகப்படுத்தலாம்.

தனது அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இலவசமான கொவிட் காப்பீட்டை இலங்கையில் வழங்கியிருந்த முதலாவது காப்புறுதி நிறுவனம் எனும் பெருமையுடன் **AIA** ஸ்ரீலங்கா திகழ்வதுடன், ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த காலத்திலும் தனது அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இலவசமான டெலிமெடிசின் சேவையினை வழங்கியிருந்ததையும் பெருந்தொற்றின் மூலமாகக் காணக்கூடியதாக இருந்தது.

இவை அனைத்திலும் **AIA** ஸ்ரீலங்காவினுடைய முன்னுரிமையானது தங்களின் அன்பிற்குரியவர்களுடன் வாழ்க்கையை முழுமையாக அனுபவிப்பதற்காக, உடல், உள மற்றும் நிதியியல் ரீதியில் உறுதியான நிலையினை அடைவதற்கு இலங்கையர்களுக்கு உதவுவதாகும்.

## ஐ.தே.கவின் தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவியை கரு ஜெயசூரிய ஏற்கவேண்டும்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைத்துள்ள தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய ஏற்க வேண்டுமென கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இக்கோரிக்கையை ஐ.தே.கவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் முன்வைத்துள்ளனர். எனினும் இக் கோரிக்கைக்கு கரு ஜெயசூரிய இதுவரை எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை.

ஏற்கனவே ஐக்கிய மக்கள் சக்தியினாலும் கரு ஜெயசூரியவிற்கு தேசியப் பட்டியல் ஆசனத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு விடுத்துள்ள அறிவிப்பு

(கொழும்பு)

சிம் அட்டையினால் செயற்படும் தொலைத்தொடர்பு உபகரணங்களை கொள்வனவு செய்தல் அல்லது ஏதாவது சேவைகளை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவால் வழங்கப்படும் அனுமதிப்பத்திர உரிமத்தை கொண்டுள்ள விற்பனையாளர்களிடமிருந்து மட்டும் பெற்றுக்கொள்ளுமாறு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்படாத தொலைத்தொடர்பு உபகரணங்கள் (சிம் அட்டையினால் செயற்படும்) தொலைத்தொடர்பு வலையமைப்புடன் இணைக்கப்படுதல் விரைவில் நிறுத்தப்படும்.

தற்போது கையடக்கத் தொலைபேசி வலையமைப்புடன் இணைக்கப்பட்டுள்ள மேற்படி உபகரணங்களுக்கு இது ஏற்புடையதாகாது என்றும் தெரிவித்துள்ளது. (ஐ-4)


**University of Jaffna, Sri Lanka**
**Faculty of Graduate Studies**

**Admission for Postgraduate Research Programme**
**Master of Philosophy (M.Phil) &**
**Doctor of Philosophy (Ph.D.) 2020**

Applications are invited from qualified persons for enrollment to the Master of Philosophy (M.Phil.) and Doctor of Philosophy (Ph.D.) research programmes offered by the Faculty of Graduate Studies, University of Jaffna

Refer the Faculty website (www.grad.jfn.ac.lk) for further details.

Registrar



**கல்யாணமாலை**

**சர்வதேச திருமண சேவை**

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 4
கி.பா: 81 செவ் 8 இல்
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. அரச உத்தியோகத்தர்.
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/5300

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அத்தம் 3
கி.பா: 15 செவ் 9 இல்
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. தனியார் நிறுவனத்தில் வேலை.
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/11085

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 3
கி.பா: சூரி, செவ் 6 இல்
உயரம்: 6"
தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. கடற்றொழில்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/11087

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பரணி 2
கி.பா: 32 செவ் 2 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: B.Sc Finance Accounting. கணக்காளர் (லண்டன்)
எதிர்பார்ப்பு: படித்த பெண். பட்டதாரி விரும்பத்தக்கது.
தொ.இ: B/11088

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி 2
கி.பா: 24 ½ செவ் 4 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: CIMA,
எதிர்பார்ப்பு: லண்டன், அவுஸ்திரேலியா, கனடா அமெரிக்கா நாட்டு PR உள்ள மணமகன் மட்டும்
தொ.இ: G/8706

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 29 ½ செவ் 4 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: முகாமைத்துவ உதவியாளர்.
எதிர்பார்ப்பு: உயர் தனியார், அரச உத்தியோகம் பார்க்கும் பட்டதாரி மணமகன்
தொ.இ: G/8707

பிறப்பு: 1986 இந்து நட்சத்திரம்: ஆயிலியம் 3 கி.பா: 43 செவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: Diploma, UK (PR)
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும். மணமகள் விவாகரத்தானவர். விவாகரத்தும் ஏற்கப்படும்
தொ.இ: G/8717

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 4
கி.பா: செவ் 8 இல்
உயரம்: 164cm
தகைமை/தொழில்: B.Sc. சுவீடனில் அரச வேலை செய்கின்றார்.
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/8720

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்பால் சில மணிநேரம் அவதியுற்ற நோயாளர்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் வைத்தியர்கள் பகுதிநேர பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதால் வைத்தியசாலைக்குச்சென்ற நோயாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த பகுதிநேர பணிப் புறக்கணிப்பு காரணமாக வைத்தியசாலையில் சிகிச்சைக்காக வந்திருந்த நோயாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டிருந்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் நிலவுகின்ற வைத்தியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு கோரி பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் இதுவரை வைத்தியர்கள் நியமிக்கப்படாமையினால் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை வைத்தியர்கள் நேற்று காலை தொடக்கம் நேற்று முற்பகல்11.30 மணிவரை பகுதிநேர பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக வந்திருந்த நோயாளர்கள் அசௌகரியங்களுக்குள்ளாகினர். தொடர்ச்சியாக பல்வேறு தரப்பினரிடமும் இது தொடர்பில் கோரிக்கை




வைத்த போதும்இதுவரை வைத்தியர் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படாததன் காரணமாக இந்த பகுதிநேர பணிப்புறக்கணிப்புப் போராட்டம் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-8)

# இவ்வருடம் மடு திருத்தல திருவிழாவில் தற்காலிக விடுதிகள் அமைக்கத் தடை

(மன்னார்)

மடு திருத்தலத்தின் ஆவணி திருவிழாவிற்கான ஏற்பாடுகள் பூர்த்தி. தற்காலிக விடுதிகள் அமைத்து தங்குவதற்கு தடை என மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.




மடு திருத்தல திருவிழாவிற்கு வரும் மக்கள் தற்காலிக விடுதிகள் அமைத்து தங்குவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக சுகாதார நடைமுறைகள் பேணப்பட்டு வருவதாகவும் பக்தர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்என மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மடு திருத்தலத்தின் திருவிழா எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை இடம் பெறவுள்ள நிலையில் முன் ஆயத்த நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மடு திருத்தல மண்டபத்தில் இடம்பெற்ற போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில் பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டு சில முடிவுகள் எடுக்கப்பட்டன.

மக்கள்"கொரோனா வைரஸ்" தொற்றின் அச்சுறுத்தலுடன் வாழ்வதனால் அதற்கு ஏற்றவாறு சுகாதாரப் பாதுகாப்புடன் அந்தக் கட்டுப்பாடுகளுடன் தான் இந்த விழாவை கொண்டாட வேண்டும். இந்த திருவிழாவிற்கு வந்து கூடாரங்களில் தங்குவது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

மடு திருத்தலத்திற்கு வருகின்ற போது பக்தர்களின் பாதுகாப்பிற்காக நாங்கள் பல விடயங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அதாவது நீங்கள் தனியாக வாகனங்களில் வரும் போது வாகனங்களில் வருகின்றவர்களின் பெயர், அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகிய வற்றை பதிவு செய்து பட்டியலிட்டு கொண்டு வர வேண்டும்.

மேலும் உங்களை அடையாளப்படுத்தக்கூடிய தேசிய அடையாள அட்டை உள்ளிட்ட அடையாள அட்டைகளையும் கட்டாயம் கொண்டு வர வேண்டும். மடு திருத்தலத்தை சுற்றி வருவதற்கு 8 நுழைவாயில்கள் உள்ளன.

ஆனால் அந்த நுழைவாசல் ஊடாக ஆலயத்திற்கு வருகின்றவர்கள் சிறிய பயணப் பொதிகளுடன் மட்டுமே வருவதற்கு பாதுகாப்பு தரப்பினர் அனுமதி வழங்குவர். நாளை 14 ஆம் திகதி மாலை நற்கருணை வழிபாட்டுடன் திருப்பவனியும் இடம் பெறும்.

அத்தோடு திருவிழா திருப்பலி எதிர்வரும் 15 ஆம் திகதி கண்டி மறை மாவட்ட ஆயர் தலைமையில் காலை 6.15 மணிக்கு கூட்டுத்திருப்பலியாக இடம் பெறும். அதன் பிறகு வழமையான திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

அதன் பிறகு திருப்பயணிகளுக்காக மேலும் மூன்று திருப்பலிகள் அதே தினத்தில் ஒப்புக் கொடுக்கப்படும்.

எனவே பக்தர்கள் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக மடு திருத்தலத்திற்கு வருகை தந்து மடு அன்னையின் ஆசியைப் பெற்றுக்கொள்ளுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ. மோகன்ராஸ், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எனப் பலர் கலந்து கொண்டனர். (5-285)

# இ.போ.ச.பேருந்து செட்டிகுளத்தில் விபத்து அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய பயணிகள்

## இரண்டு மாடுகள் பரிதாபமாக பலி

(வவுனியா)

செட்டிகுளம் பகுதியிலிருந்து வவுனியா நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து பூவரசங்குளம் பகுதியில் விபத்துக்குள்ளானது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், நேற்று காலை செட்டிகுளம் பகுதியிலிருந்து வவுனியாவிற்கு சென்ற இலங்கை போக்குவரத்து சபை பேருந்து பூவரசங்குளம் - சண்முகபுரம் பகுதியில் பயணித்து கொண்டிருந்த போது திடீரென்று இயந்திரக் கோளாறு ஏற்பட்டு வீதியை விட்டு விலகியது.

இதன்போது வீதியோரத்தில் மேய்ந்துகொண்டிருந்த மாடுகள் மீது மோதியதில் இரண்டு மாடுகள் உயிரிழந்தன. பேருந்தில் பயணித்த பயணிகளில் எவருக்கும் உயிராபத்து ஏற்படவில்லை.

இவ்விபத்து சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளைப் பூவரசங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-5-8-299)

# சட்டவிரோதமாக தங்கியிருந்த ரஷ்யப் பிரஜை மன்னாரில் கைது

(மன்னார்)

தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் காலாவதியான விசாவுடன் சட்ட விரோதமாக தங்கியிருந்த ரஷ்யா நாட்டுப் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டு தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். தலைமன்னார் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட குறித்த நபர் தலைமன்னார் பொலிஸாரிடம் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டார்.

பொலிஸாரின் விசாரணைகளைத் தொடர்ந்து பதில் நீதிவான் கயஸ் பெல்டானோ முன்னிலையில் குறித்த ரஷ்ய பிரஜை ஆஜர்படுத்தப்பட்டார்.

விசாரணைகளை மேற்கொண்ட பதில் நீதவான் குறித்த நபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

மேலும் குறித்த ரஷ்யப் பிரஜைக்கு கொரோனா தொற்று இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பெயரில் தலைமன்னார் பொலிஸாரின் பாதுகாப்பில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

குறித்த நபருக்கான பி.சி.ஆர்.பரிசோதனை அறிக்கை கிடைக்கப் பெற்ற பின்னர் மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-8)

# இடுகம கொவிட் - 19 நிதிய வைப்பு

# ஆயிரத்து 564 மில்லியனாக அதிகரிப்பு

தனிப்பட்ட, நிறுவன அன்பளிப்புகள் மற்றும் நேரடி வைப்புகளுடன் 'இடுகம' கொவிட் - 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி ஆயிரத்து 564 மில்லியனாக அதிகரித்துள்ளது.

தனசிறி வித்தானகே ஒரு இலட்சம் ரூபாவையும் திருமதி ஸ்ரீயானி விஜேவர்தன ஒரு இலட்சம் ரூபாவையும் ஜே.எச். ஆரியசிறி ஒரு இலட்சம் ரூபாவையும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முன்பள்ளி ஆசிரியர் தொழிற் சங்கம் 6 ஆயிரத்து 500 ரூபாவையும் டி.கே. ரணதுங்க மூவாயிரம் ரூபாவையும் எம்.காமினி டி.பீரிஸ் 10 ஆயிரம் ரூபாவையும் திருமதி பி.ஏ. காந்தி 5 ஆயிரம் ரூபாவையும் சிறுவர்களான செனிந்து வின்சர மற்றும் தசுனி விகன்ஷா 970 ரூபாவையும் சிறுவர்களான கஜினி விக்கிரமசிங்க மற்றும் பவிந்து விக்கிரமசிங்க ஆயிரத்து 374 ரூபாய் 25 சதத்தையும் ஆர்.எச்.விமலரத்ன 362 ரூபாய் 75 சதத்தையும் சிறுமி ஒமேனா செவ்வந்தி 521 ரூபாவையும் சிறுவன் மனுஜ மதிசெய கமகே 280 ரூபாவையும் சிறுவன் பவன் சமிறு நெத்துசர ஆயிரத்து 754 ரூபாய் 50 சதத்தையும் சிறுவன் யசந்துறுல் 2 ஆயிரத்து 22 ரூபாய் 50 சதத்தையும் சிறுமி ஹசலி விதுமினி விஜேதுங்க 626 ரூபாவையும் சிறுமி ஆர்.ஏ. தகம்தி ரெஹன்ஷா ஆயிரத்து 384 ரூபாவையும் கஹட்டபிட்டியகே யசபால 50 ஆயிரம் ரூபாவையும் பி.ஆர்.ஜே.செனவிரத்ன 7 ஆயிரத்து 500 ரூபாவையும் ஸ்ரீசுமன சமன் தேவாலயத்தின் பஸ்நாயக்க நிலமே ஜயம்பதி பண்டார ஹீங் கெந்த ஒரு இலட்சம் ரூபாவையும் ஸ்ரீ மகா பத்தினி தேவாலயத்தின் பஸ்நாயக்க நிலமே ஹேமந்த பண்டார 5 இலட்சம் ரூபாவையும் வரலாற்றுச் சிறப்பு மிக்க பஸ்கம ஸ்ரீநாத தேவாலயத்தின் பஸ்நாயக்க நிலமே தமிந்த பண்டார உடுரோவண 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவையும் அன்பளிப்புச் செய்துள்ளனர். குறித்த அன்பளிப்புகள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

தபால் திணைக்களம் 16 இலட்சத்து 4 ஆயிரத்து 260 ரூபாய் 61 சதத்தையும் Egis International 3 இலட்சத்து 73 ஆயிரத்து 600 ரூபாவையும் ஊவா மாகாணத்தில் சேவை புரியும் உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் அரச ஊழியர்கள் ஒரு கோடியே 2 இலட்சத்து 98 ஆயிரத்து 112 ரூபாய் 68 சதத்தையும் தங்கல்ல நகர சபை உறுப்பினர் வை.டக்ளஸ் 45 ஆயிரம் ரூபாவையும் தோட்டத் தொழில் மற்றும் ஏற்றுமதி விவசாய அமைச்சும் அதன் கீழுள்ள நிறுவனங்களும் 9 இலட்சத்து 69 ஆயிரத்து 98 ரூபாய் 53 சதத்தையும் நிதியத்திற்கு அன்பளிப்பு செய்தனர்.

தற்போது இடுகம கொவிட்-19 சுகாதார, பாதுகாப்பு நிதியத்தின் மீதி ஆயிரத்து 564 மில்லியன் ரூபாவாகும்.

உள்நாட்டு, வெளிநாட்டு நன்கொடையாளர்கள் இக்கணக்கிற்கு பங்களிப்புச் செய்து வருகின்றனர். காசோலைகள் அல்லது டெலிகிராப்கள் மூலமும் www.itukama.lk என்ற இணையத்தளத்தின் ஊடாகவோ அல்லது #207# என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பங்களிப்பைச் செய்ய முடியும்.

076 070 0700/ 011 232 0880/ 011 235 4340/011 242 4012 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. (ஜ-4)

# இலங்கையுடனான உறவை வலுப்படுத்தத் தயார்

## சீனா திட்டவட்டம்

(பீஜிங்)

இரு தரப்பினருக்கும் பயனளிக்கும் வகையில் இலங்கையுடனான பாரம்பரிய உறவுகளை வலுப்படுத்தத் தயாராக உள்ளதாக சீனா தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், சீன அரசாங்க செய்தித் தொடர்பாளர் ஜாவே லிஜியென் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை பிரதமராக மகிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டதற்கு சீனா வாழ்த்துத் தெரிவித்ததுடன் சீனப் பிரதமரும் தனது வாழ்த்துச்



செய்தியை அனுப்பியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் 28 ஆவது பிரதமராக மகிந்த ராஜபக்ஷ நேற்று தனது கடமைகளை பொறுப்பேற்றுள்ளார். இந் நிலையில் அவருக்கு ஏனைய நாடுகள் தொடர்ந்து வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ரக்பி வீரர் வசிம் தாஜுடீன் கொலையில் நீதிக்கான நம்பிக்கையை இழந்து விட்டோம்

## குடும்பத்தினர் ஆதங்கம்

(கொழும்பு)

ரக்பி வீரர் வசிம் தாஜுடீன் கொலை தொடர்பில் நீதிக்கான நம்பிக்கையை தாம் இழந்து விட்டதாக அவரின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

அவருடைய சடலம் தோண்டியெடுக்கப்பட்டு புதிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் ஐந்து வருடங்கள் ஆகியுள்ளன.

இந்நிலையில் வசீமின் உடல் தோண்டியெடுக்கப்பட்ட போது தமது குடும்பத்தினரின் இதயங்கள் உடைந்து போனதாக வசீமின் சகோதரரி பேஸ்



புக் பதிவு ஒன்றை செய்துள்ளார்.

எனினும் அவருடைய மரணத்துக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையிலேயே சடலத்தை தோண்டுவதற்கு தாம் அனுமதித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்

எனினும் நீதிகிடைக்கும் என்ற நம்பிக்கை இன்று அற்றுப்போயுள்ளதாக வசீமின் சகோதரியான ஆயிஷா தாஜுடீன் தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

வசீமின் கொலையில் நீதியை பெற்றுத்தருவதாக முன்னைய அரசாங்கம் உறுதியளித்திருந்த போதும் அது நிறைவேற்றப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

# அமைச்சுப் பதவி வழங்கக்கோரி மகிந்த வீட்டில் குவிந்த உறுப்பினர்கள்



(கொழும்பு)

தமக்கு அமைச்சுப் பதவி வழங்குமாறு கோரி பெருமளவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இம்முறை தேர்தலில் வெற்றி பெற்ற பாரிய அளவிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வேட்பாளர்கள் பிரதமரிடம் அமைச்சுப் பதவி கோரி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

அமைச்சர்கள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளமையினால் அவரிடம் இது தொடர்பான கோரிக்கைகள் விடுவதற்கு அச்சமடைந்த உறுப்பினர்கள் பிரதமரை நாடியுள்ளனர். இதனால் கட்சி உறுப்பினர்கள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து பல்வேறு முறையில் விருப்பமான அமைச்சுப் பதவிகளை கேட்பதாக குறிப்பிடப்படுகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் பாராளுமன்றத்திற்கு தெரிவாகிய 150 பேரில் 100 பேர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவிடம் நேரடியாகவும் அவரின் குடும்ப உறுப்பினருக்கும் நெருக்கமான நபர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (ஜ)

# உத்தியோகபூர்வ கையிருப்பு

## 7.1 பில்லியன் டொலர்களாக உயர்வு

(கொழும்பு)

நாட்டின் மொத்த உத்தியோகபூர்வ கையிருப்பு 7.1 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்வடைந்துள்ளது.


கடந்த ஜூலைமாத ஆரம்பத்தில் 6 ஆயிரத்து 769. 46 சதம் மில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்பட்ட மொத்தக் கையிருப்பு ஜூலை மாதத்தின் இறுதியில் 407.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அதிகரித்து 7 ஆயிரத்து 102 மில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்பட்டது என மத்திய வங்கியின் தகவல்கள் தெரிவித்துள்ளன.

ஜூலை மாத இறுதிக்குள், வெளிநாட்டு நாணய இருப்பு 6 ஆயிரத்து 605.1 மில்லியன் டொலர்களாகவும், சர்வதேச நாணய நிதியத்தில் இருப்பு நிலை 67.6 மில்லியன் டொலர்களாகவும் காணப்பட்டுள்ளது.

இலங்கையின் தங்கத்தின் இருப்பு 425.6 மில்லியன் டொலர்களாகவும், பிற இருப்பு சொத்துக்கள் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (ஜ-4)

# 1921 முதல் இன்று வரை வடமாகாண பாராளுமன்றத் தேர்தல்களும் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும்

18



கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

2020 ஆம் ஆண்டுத் தேர்தலுக்கு மாவட்ட ரீதியில் ஒதுக்கப்பட்ட ஆசனங்களின் எண்ணிக்கை யாழ்ப்பாணம் (7), வன்னி (6), அநுராதபுரம் (9), பொலநறுவை (5), குருநாகல் (15), புத்தளம் (8), மட்டக்களப்பு (5), அம்பாறை (திகாமடுல்ல) (7), திருகோணமலை (4), கண்டி (12), மாத்தளை (5), நுவரெலியா (8), கொழும்பு (19), கமபஹா (18), களுத்துறை (10), பதுளை (9), மொனராகலை (6), இரத்தினபுரி (11), கேகாலை (9) காலி (9), மாத்தறை (7), அம்பாந்தோட்டை (7) மொத்தம் (196) ஆகும்.

2019 ஆம்ஆண்டின் தேருநர் இடாப் பின்படி வடமாகாணத்தில் தொகுதி ரீதியாக பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கையை அட்டவணை-41 காட்டுகிறது.

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் 7 ஆசனங்களுக்காக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு (ITAK, TELO, PLOTE), தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி (அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்), எங்கள் மக்கள் சக்தி கட்சி, ஈழவர் ஜனநாயக முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), ஐக்கிய சோசலிசக் கட்சி, ஜனசெத்த பெரமுன, ஜாதிக ஜன பலவேகய, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி, தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி, புதிய ஜனநாயக முன்னணி, முன்னிலை சோசலிசக் கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, லங்கா சமசமஜா கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, சமகி ஜனபலவேகய, சோசலிச சமத்துவக் கட்சி, சிங்களதீப ஜாதிக பெரமுன மற்றும் 14 சுயேட்சைக் குழுகள் ஆகியவையும் போட்டியிடுகின்றன. ஒவ்வொரு கட்சி சார்பிலும் 10 அபேட்சகர்களின்படி 330 பேர் போட்டியிடுகின்றனர்.

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 6 ஆசனங்களுக்காக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு (ITAK,TELO, PLOTE), தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி (அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்), எங்கள் மக்கள் சக்தி கட்சி, ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி (EPDP), ஐக்கிய தேசியக் கட்சி, ஜனசெத்த பெரமுன, ஜாதிக ஜன பலவேகய, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, தமிழரின் ஜனநாயக சோசலிச முன்னணி, தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி, முன்னிலை சோசலிசக் கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, லிபரல் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, இலங்கையின் சோசலிசக் கட்சி, சமகி ஜனபலவேகய, சிங்களதீப ஜாதிக பெரமுன மற்றும் 28 சுயேட்சைக் குழுகள் ஆகியவையும் போட்டியிடுகின்றன.

ஒவ்வொரு கட்சி சார்பிலும் 10 அபேட்சகர்களின் படி 450 பேர் போட்டியிடுகின்றனர். யாழ்.மற்றும் வன்னி மாவட்டங்களின் கடந்த 5 பாராளுமன்றத் தேர்தல்களின் வாக்களிப்பு வீதத்தை அட்டவணை-42 மற்றும் 43 காட்டுகின்றன.

அட்டவணை 39- இலங்கை பாராளுமன்றத் தேர்தல், 2015 .
வன்னி தேர்தல் மாவட்டம்

| தொகுதி | TNA | UPFA | UNF (UNP) | அளிக்கப்பட்ட வாக்குகள் | பதிவு செய்யப்பட்ட வாக்காளர் |
|---|---|---|---|---|---|
| மன்னார் | 27,096 | 2,596 | 12,738 | 50,775 | 79,433 |
| முல்லைத்தீவு | 27,269 | 2,582 | 6,244 | 44,487 | 63,920 |
| வவுனியா | 31,836 | 14,402 | 14,380 | 72,669 | 109,705 |
| தபால் வாக்குகள் | 3,681 | 770 | 1,444 | 6,598 | |
| இடம்பெயாவு வாகு | 4 | 615 | 4,707 | 7,401 | |
| மொத்த வாக்குகள் | 89,886 | 20,965 | 39,513 | 181,930 | 253,058 |
| சதவீதம் | 54.55% | 12.72% | 23.98% | | |
| ஆசனங்கள் | 4 | 1 | 1 | | |

## தமிழர் அரசியல்

கூட்டமைப்பின் ஆரம்பத்திலும் அதன் பெரு வெற்றியிலும் விடுதலைப் புலிகளின் பங்கு கணிசமாக இருந்திருக்கின்றது. அப்போது கட்சியில் பல அணிகள் இருந்தன. பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் இருந்து விலகின. தமிழர் விடுதலைக் கூட்டணியின் சில அங்கத்தவர்கள் இரா. சம்பந்தனின் தலைமையில் கூட்டமைப்பில் தொடர்ந்து இயங்கினர். இவர்கள் முடக்கி வைக்கப்பட்டிருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியைத் தமது கட்சியாக ஏற்றனர். இக்கட்சியின் வீட்டுச் சின்னத்திலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பின்னர் தேர்தல்களில் போட்டியிட்டது. 2013 ஆம் ஆண்டில் தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையிலான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சேர்ந்து கொண்டது. இப்போது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் (EPRLF - சுரேஷ் அணி) பிரிந்துவிட்டது. சி.வி. விக்கினேஸ்வரன், சிவாஜிலிங்கம் மற்றும் ஸ்ரீகாந்தா போன்றோரும் வெளியேறிவிட்டனர்.

2009 ஆம் ஆண்டுவரை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்று விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டுவிட்டார்கள் என்ற செய்தி வந்ததோ அன்றிலிருந்து சம்பந்தன் உட்பட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் தன்னிச்சையாகவும் சுயநல நோக்கோடும் செயற்பட ஆரம்பித்துவிட்டார்கள் என்று மக்கள் கூறுகின்றனர்.

ஒற்றுமையையும் பலத்தையும் இலக்காகக் கொண்டு உருவாக்கப்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அந்த ஒற்றுமையும் பலமும் நிலைத்திருக்கிறதா, எதிர்காலத்தில் அதன் பலம் நிலைத்திருக்குமா? என்ற சந்தேகங்கள் வலுவடைந்து வருகின்றன. பதவிகளுக்காகவும் சுயநல நோக்கத்தோடு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் உள்ள அனைத்து கட்சிகளும் செயற்படுவதை தற்போது வெளிப்படையாக காண முடிகிறது. கூட்டமைப்பினர் தமது தவறுகளில் இருந்து தம்மைத் திருத்தாவிட்டால் என்றோ ஒரு நாள் நிச்சயம் மாற்றுத் தலைமையின் அவசியம் உணரப்படும். இப்போது வேறுபல புதிய கூட்டணிகள் உருவாகி வருகின்றன. அக்கூட்டணிகளும் தமிழர் பிரச்சினைக்காக ஒன்று சேர்வதுபோல் தெரியவில்லை.

ஈழத் தமிழரின் ஜனநாயக அரசியலுக்கு நீண்டதொரு வரலாற்றுத் தொடர்ச்சி உண்டு. அன்றைய சேர்.பொன். இராமநாதன் தொடக்கம் ஜீ.ஜீ. பொன்னம்பலம், செல்வநாயகம், அமிர்தலிங்கம் ஊடாக இன்றைய இரா. சம்பந்தன் வரையில் மக்களின் மென்பங்குபற்றலுடன் கூடிய அவ்வகை அரசியலை முன்னெடுத்த தமிழ் தலைவர்கள் பலரை நினைவுகூர முடியும். அவ்வாறான மென்போக்கு கொண்ட தலைமைகளில் காணப்பட்ட குறை அல்லது பலவீனம் தமிழர்களின் மொத்த அரசியலையும் பலமிழக்கச் செய்திருக்கின்றது. ஆங்கிலேயரின் அவையில் அதிக செல்வாக்குப் பெற்றிருந்த சேர். பொன். இராமநாதன் தமிழர் அரசியல் விடயத்தில் ஆழமான கரிசனை கொண்டிருந்தவராகக் காணப்பட்டிருந்தால் இன்றைய இனப்பிரச்சினை அன்றே தவிர்க்கப்பட்டிருக்கும் என்று குறிப்பிடுவோரும் உண்டு. இராமநாதன் போன்று வாய்ப்புக்களைத் தவறவிட்ட தலைவர்களது அரசியல் கடந்து நீண்ட காலம் ஆகிவிட்டதனால், தற்போது தமிழர்களின் அரசியல் தலைவிதியை எழுதிக் கொண்டிருக்கும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரும், அதன் தலைவர் இரா.சம்பந்தனும் வந்த வாய்ப்புக்களைத் தவறவிட்டுவிட்டார்கள் என்று கூறுவோரும் உண்டு. இத் தலைமைகள் அல்லது இனிவரும் தலைமைகள் தமிழர்களை எங்கே கொண்டு செல்வார்கள் என்பது கடவுளுக்குத்தான் தெரியும்.

அட்டவணை 40 இலங்கை பாராளுமன்றத் தேர்தல், 2015
வன்னி தேர்தல் மாவட்டம் தேர்தலில் வெற்றியடைந்தவர்கள்

| தெரிவுசெய்யப்பட்டவரின் பெயர் | கட்சி | விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| சாள்ஸ் நிர்மலநாதன் | TNA (ITAK) | 34,620 |
| செல்வம் அடைக்கலநாதன் | TNA (TELO) | 26,397 |
| சிவசக்தி ஆனந்தன் | TNA (EPRLF) | 25,027 |
| சிவப்பிரகாசம் சிவமோகன் | TNA (EPRLF) | 18,412 |
| அப்துல் றிசாட் பதியுதீன் | ஐக்கிய தேசிய முன்னணி(UNP) | 26,291 |
| காதர் காதர் மஸ்தான் | UPFA | 7,198 |

அட்டவணை- 41
பதிவு செய்யப்பட்ட வாக்காளர் 2019

| யாழ் மாவட்டத் தொகுதிகள் | | | |
|---|---|---|---|
| சாவகச்சேரி | 55,291 | மானிப்பாய் | 58,720 |
| யாழ்ப்பாணம் | 35,216 | நல்லூர் | 50,849 |
| காங்கேசன்துறை | 63,535 | பருத்தித்துறை | 39,226 |
| ஊர்காவற்றுறை | 23,488 | உடுப்பிட்டி | 41,403 |
| கிளிநொச்சி | 92,264 | வட்டுக்கோட்டை | 50,441 |
| கோப்பாய் | 61,415 | மொத்த வாக்காளர் | 571,848 |
| **வன்னி மாவட்டத் தொகுதிகள்** | | | |
| மன்னார் | 88,853 | வவுனியா | 119,811 |
| முல்லைத்தீவு | 78,360 | மொத்த வாக்காளர் | 287,024 |

அட்டவணை -42
யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்
கடந்த 5 பாராளுமன்றத் தேர்தல்களில் வாக்களிப்பு வீதம்

| தொகுதி | 2000 | 2001 | 2004 | 2010 | 2015 |
|---|---|---|---|---|---|
| சாவகச்சேரி | 12.39% | 28.92% | 62.20% | 25.57% | 55.86% |
| யாழ்ப்பாணம் | 10.64% | 24.58% | 34.37% | 17.31% | 64.76% |
| காங்கேசன்துறை | 19.52% | 26.76% | 35.72% | 19.06% | 39.24% |
| ஊர்காவற்றுறை | 32.02% | 41.83% | 32.24% | 19.34% | 65.82% |
| கிளிநொச்சி | 1.76% | 3.38% | 55.46% | 12.13% | 68.22% |
| கோப்பாய் | 28.14% | 38.18% | 52.02% | 26.91% | 59.45% |
| மானிப்பாய் | 30.35% | 39.43% | 46.65% | 26.60% | 61.36% |
| நல்லூர் | 17.24% | 29.49% | 40.08% | 20.80% | 61.80% |
| பருத்தித்துறை | 21.49% | 32.56% | 53.68% | 22.86% | 57.92% |
| உடுப்பிட்டி | 22.85% | 34.20% | 50.78% | 20.97% | 53.92% |
| வட்டுக்கோட்டை | 27.60% | 33.01% | 47.16% | 26.94% | 61.17% |
| மொத்த வாக்குகள் | 20.04% | 31.14% | 47.38% | 23.33% | 61.56% |

அளிக்கப்பட்ட தபால் வாக்குகள், இடம்பெயர்வு வாக்குகள் தொகுதிகளுக்குள் உள்ளடக்கப்படவில்லை

(முற்றும்)

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# மூலிகை எண்ணெய்க் குளியல்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

பழங்காலத்தில் வாழ்ந்த சித்தர்கள் உலக மக்கள் அனைவரும் நலமான வாழ்வு வாழ்ந்து பேரின்பத்தில் திளைத்திருப்பதற்கு மிகச் சிறந்த வாழ்வியல் முறைகளை வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். அவை தமிழர்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்திருந்த வரையிலும் நலமான வாழ்வு நீர்த்தது. நவீன பண்பாட்டுப் படையெடுப்பால் சித்தர் வாழ்வியல் புறக் கணிக்கப்பட்டபோது நல வாழ்வு கேள்விக்குறியாகிவிட்டது.

தமிழர்களின் உடல் நலத்தினை பாதுகாத்துக் கொண்டிருந்த பல நல்ல பழக்கங்கள் இன்று காணாமல் போய் விட்டன. அவற்றில் எண்ணெயிட்டுக் குளிக்கும் பழக்கமும் ஒன்றாகும். அவற்றிலும் மூலிகை எண்ணெய்க்குளியல் உடல் நலத்தைக் காப்பதில் மேலும் சிறந்ததாகும்.

சித்தர்கள் எண்ணெயிட்டுக் குளிப்பதால் ஏற்படும் உடல் நன்மைகளை வலியுறுத்துகின்றனர். பல நோய் நிலைகளிலும் மூலிகைகள் கலந்த எண்ணெயினைத் தேய்த்துக் குளித்த பின்பு தான் மருந்துகள் கொடுக்க வேண்டுமென தெளிவாக வலியுறுத்துகின்றனர். நோய்களுக்கு தகுந்தவாறு குளியல் முறையும் மாறுபடும்.

எண்ணெயிட்டுக் குளிக்கும் போது உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை எல்லா இடங்களிலும் எண்ணெய் முழுமையாகப் பரவியிருக்க வேண்டும். உடலின் ஒன்பது துளைகளிலும் எண்ணெய் விடல் வேண்டும். கண்களுக்கு 2,3 துளிகளும், மூக்கில் 4 துளிகளும், காதுகளுக்கு 6 துளிகளும் விடல் வேண்டும் தலை, கால், பாதம், உள்ளங்கை ஆகிய இடங்களில் எண்ணெயினை மிகுதியாகப் பயன்படுத்த வேண்டும். உடலில் தேய்க்கும் போது சூடு ஏற்படக்கூடாது. உடலில் மிருதுவாக அழுத்தம் கொடுத்தும் விரல் நுனிகளால் தேய்த்தும் தசைப் பகுதியில் இலகுவாகத் தட்டிவிட்டும் முதுகுத் தண்டுப் பகுதியில் உள்ளங்கையாலோ பெரு விரலாலோ நீவிவிட்டும் எண்ணெய் தேய்க்க வேண்டும்.

எண்ணெய் இட்டுத் தேய்த்த பின்பு குறைந்தது 40 நிமிடங்களாவது ஊறவிடல் வேண்டும். அப்போதுதான் முழுப்பயனும் கிடைக்கும். எண்ணெயிட்டுக் குளிப்பதற்கு வெந்நீரையே பயன்படுத்தல் வேண்டும்.

பொதுவாக நல்லெண்ணெய் தேய்த்துக் குளிப்பது நன்று. நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், பசுநெய் மூன்றும் சம அளவு கலந்து காய்ச்சியும் பயன்படுத்தலாம். இதற்கு முக்கூட்டு நெய் எனப் பெயர்.

தேங்காய் நெய்யைத் தனியாகப் பயன்படுத்தியும் குளிக்கலாம், நல்லெண்ணெயுடன் மிளகு, நச்சீரகம், பூண்டு, சிறு வெங்காயம் சேர்த்துக் காய்ச்சிப் பயன்படுத்தலாம்.

எண்ணெயில் வெந்த பூண்டையும், வெந்தயத்தையும் சாப்பிட்டு விட்டு மிளகு, சீரகத்தோடு எண்ணெயையும் தலை உச்சியில் தேய்க்கலாம்.

ஆமணக்கெண்ணெயுடன் சிறிய வெங்காயத்தைச் சேர்த்துக் காய்ச்சிப் பயன்படுத்தலாம்.

வெயில் காலத்திலும் உடல்சூடு கூடியிருக் கும் போது இந்தத் தைலம் சிறந்த பலனைக் கொடுக்கும்.

குளிர்காலத்தில் தேங்காய் எண்ணெயுடன் மிளகு சேர்த்துக் காய்ச்சிக் குளித்தால் உடல் குளிரைத் தாங்கும் ஆற்றல் பெறும். முற்றிய செவ்விளநீர் தேங்காயினை நீர் விடாமல் அரைத்துப் பாலெடுத்து அந்தப் பாலினைக் காய்ச்சிக் கொண்டிருந்தால் அது எண்ணெயாக மாறும். இதனைப் பிறந்த குழந்தைகளுக்கு உடலில் பூசிக் குளிப்பாட்டுவதன் மூலமாகத் தோல் தசை வலிமையடையும். அழகான மிருதுவான சருமத்தினையும் கொடுக்கும்.

நன்றாக உருக்கிய பசுநெய்யினை உடல்முழுவதும் பூசிக் குளிப்பதால் உடல் சூட்டினைக் குறைத்து உடல் பலத்தைக் கொடுக்கும்.

பசுநெய் நல்லெண்ணெய் சம அளவு கலந்து ஓமத்தை அதனுடன் கலந்து காய்ச்சிக் குளிப்பதால் தலைப்பாரம், மூக்கடைப்பு, தும்மல் குணமாகும்.

கற்றாழைச்சாறுடன் நல்லெண்ணெய் கலந்து காய்ச்சி பயன்படுத்தினால் உடற்சூடு தணிந்து உடல்வலிமை உண்டாகும். இரவு உறக்கம் வரும், கண்சூடு, எரிச்சல் சிவப்பு மாறும்.


சீரகமும், நல்லெண்ணெய் கலந்து (100 மில்லிக்கு 2 தேக்கரண்டி சீரகம்) காய்ச்சிப்பயன்படுத்தினால் உயர் இரத்த அழுத்தம் சீராகும்.

கறிவேப்பிலை, பொன்னாங்காணி, கரிசலாங்கண்ணி, மருதோன்றி, நெல்லிக்காய், வெந்தயம், கொட்டைக் கரந்தை போன்ற ஏராளமான மூலிகைகளை எண்ணெயுடன் கலந்து காய்ச்சி பயன்படுத்துவதால் பொடுகு நீங்கி முடி பாதுகாப்போடு இருப்பதோடு உடல் உறுப்புக்கள் வலிமை அடையும்.

எண்ணெயிட்டுக் குளிக்கும் போது உடலைத் தூய்மைப்படுத்த சிகைக்காய் பொடியும் பாசிப்பயறும் சம அளவு கலந்து சோறுவடித்த கஞ்சியுடன் நன்கு கலந்து பயன்படுத்தலாம்.

அல்லது செம்பரத்தை இலைப்பொடி, உலர்ந்த எலுமிச்சம்பழத் தோல் பொடி, நெல்லிவற்றல் பொடி, மகிழப்பூப் பொடி போன்றவற்றையும் பயன்படுத்தலாம்.





உடம்பு முழுக்க பொடி திமர்தலாக (பொடியை உடம்பில் பூசிக் தேய்தல்) இலுப்பை பிண்ணாக்கு, உசிலம்பட்டைப் பொடி பயன்படுத்தலாம்.

முடிக்கு பூவந்திக் கொட்டை, பொடுதலை, காக்கணவன் இலை, இலந்தை இலை, இலந்தைப்புற்று போன்றவற்றை சிகைக்காயுடன் சேர்த்து பொடித்து பயன் படுத்தும் போது முடி கேடடையாமல் தூய்மையாகும்.

எண்ணெயிட்டுக் குளிக்கும்போது அதிகம் புளிப்புள்ள, பழப்புளி போன்றவற்றைத் நீக்க வேண்டும். மாங்காயை தவிர்த்து பதிலாக நெல்லிக்காயைப் பயன்படுத்தலாம், பால், தயிர் நீக்கி மோர் சேர்த்துக் கொள்ளலாம். எளிதில் செரிக்காத உணவுகளை நீக்க வேண்டும். மது புகை பயன்படுத்தக் கூடாது.

குளிர்ந்த நீர் பயன்படுத்தலாம். வெந்நீர் குடிக்க வேண்டும். பகல் உறக்கம் ஆகாது. பிஞ்சுக் காய்கள், துவரை, அறக்கீரை, மிளகு, சீரகம், உருக்கிய நெய்பயன்படுத்தலாம்.

உடலில் இயல்பான இயக்கம் சீராவதற்கு எண்ணெய்க்குளியல் உதவுகிறது. உடற்கட்டுக்களிலுள்ள மாசுக்கள் நீங்குகின்றன.

வாரம் இருமுறை எண்ணெயிட்டுக் குளிப்பதால் உடலில் இயல்பான நிலை பாதுகாக்கப்படும். உடலில் கட்டமைப்பும், உடல் இயக்கமும் சீராவதற்கு எண்ணெய் குளியல் அவசியமாகிறது.

தோலிற்கும், தசைக்கும் இரத்த ஓட்டம் சீராவதால் தோல் சுருக்கம் விரைவாக நீங்கித் தோல் பளபளப்புடன் இருக்கும். தோல் நோய்கள் ஏற்படுவதிலிருந்து பாதுகாக்கும்.

தோலிற்கு இயற்கையான கவசமாக இந்த எண்ணெய் விளங்குகின்றது. பல நோய்களைத் தடுக்கும் ஆற்றல் எண்ணெய்க் குளியலுக்கு உண்டு.

பாதங்களில் செய்யும் எண்ணெய் பூச்சினால் பாதங்களில் உறுதியும், தூக்கம், தெளிவான கண்பார்வை பெறலாம். பாதத்தில் உணர்ச்சியின்மை, வெடிப்பு, வலிமரத்துப் போதல் நீங்கும்.

எண்ணெய்க்குளியல் செய்யும் போது உடலில் தேய்க்கும் எண்ணெயிலுள்ள உயிர்ச்சத்துக்கள் இயற்கையான தாவர வேதியற் பொருட்கள் பிற நுண் ஊட்டச்சத்துக்கள் மிகவும் நுட்பமான முறையில் உடலால் உட்கிரகிக்கப்படுகின்றது.

எண்ணெயிலுள்ள நுண் சத்துக்கள் உட்கிரகிப்படுவது போன்றே உடலில் உட்புறமுள்ள கழிவுகளும் வெளியேறுகின்றன.

வாரத்தில் ஒரு முறையாவது கஸ்தூரி மஞ்சள், மிளகு, வேப்பம் வித்து, கடுக்காய்த் தோல், நெல்லிப் பருப்பு, இலந்தை சம அளவு கலந்து பசுவின் பால் விட்டரைத்து சிறிது சூடுபடுத்தி இளஞ்சூட்டுடன் உச்சியிலும், உடம்பிலும் பூசிச் சிறிது ஊற விட்டுக்குளித்து வந்தால் சருமத்தை பாது காப்பதோடு நோய்கள் உடலை நெருங்காது காத்துக் கொள்ளலாம்.

# பாரதம்

## தலைமறைவாக இருந்த 3 ஆயிரம் கொரோனா நோயாளிகள் சிக்கினர்

(பெங்களூர்)

பெங்களூரில் தவறான தகவல் அளித்து தலைமறைவாக இருந்த 3,300 கொரோனா நோயாளிகள் சிக்கினார்கள். பொலிஸாருடன் இணைந்து சுகாதாரத்துறையினர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

பெங்களூரில் கொரோனா வைரஸ் வேகமாக பரவி வருகிறது. தினமும் சராசரியாக 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. இந்த நிலையில், கொரோனா பரிசோதனை மேற்கொள்ளும் நபர்கள் தவறான முகவரி, தவறான செல்போன் உள்ளிட்ட தகவல்களை மாநகராட்சியிடம் கொடுத்து வந்தனர். இதன் காரணமாக கொரோனா பாதிப்புக்கு உள்ளான 4 ஆயிரத்து 327 பேர் கடந்த 7ஆம் திகதி வரை சுகாதாரத்துறையின் கைக்கு சிக்காமல் தலைமறைவாக இருந்தனர்.



அந்த கொரோனா நோயாளிகளால் மற்றவர்களுக்கும் பாதிப்பு ஏற்படும் பீதி உருவானது.

பெரும்பாலானோர் கொரோனா பாதிப்பு உறுதியானதும், தங்களது செல்போனை சுவிட்ச் ஓப் செய்துவிட்டு தலைமறைவாகி இருந்தார்கள்.

பலர் தவறான முகவரியை கொடுத்திருந்ததால் செல்போனில் தொடர்பு கொண்டு பேசினாலும், சிகிச்சை பெறுவதற்கு வைத்தியசாலைக்கு வராமல் இருந்தனர்.

அதாவது தலைமறைவாக இருந்த 4 ஆயிரத்து 327 பேரில், 3,300 கொரோனா நோயாளிகள் பொலிஸார் உதவியுடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலர் வைத்தியசாலையிலும், பலர் கொரோனா மையத்திலும், மேலும் சிலர் வீட்டு தனிமையிலும் வைக்கப்பட்டுள்ளனர்.

அதாவது கொரோனா அறிகுறி இருப்பவர்கள் மட்டும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். தலைமறைவாகி விட்ட மற்றவர்களை பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (2)

## உத்தரகாண்டில் கனமழை; நிலச்சரிவில் பல கடைகள் சேதம்



(டில்லி)

உத்தரகாண்டில் நேற்று முன்தினம் இரவு பெய்த கனமழையால் நிலச்சரிவு ஏற்பட்டு பல கடைகள் சேதமடைந்த நிலையில், போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு பருவமழை காரணமாக கேரளா, மகாராஷ்டிரா, கர்நாடக மாநிலத்தில் கனமழை பெய்து வருகிறது. ஆங்காங்கே நிலச்சரிவும் ஏற்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கையை பாதித்துள்ளது.

தென்மேற்கு பருவமழை காரணமாக அசாம், பீகார், உத்தரகாண்ட் மாநிலத்திலும் கனமழை பெய்து வருகிறது. பீகார், அசாமில் ஓரளவிற்கு மழை குறைந்துள்ளது.

உத்தரகாண்டில் நேற்றிரவு ஓரிரு இடங்களில் கனமழை பெய்தது. இதில் பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது, சமோளி மாவட்டத்தின் பத்ரிநாத் தேசிய நெடுஞ்சாலையில் நிலச்சரிவு ஏற்பட்டது.

இந்த நிலச்சரிவில் பல கடைகள் சேதமாகின. மேலும், தேசிய நெடுஞ்சாலை போக்குவரத்து துண்டிக்கப்பட்டது. (2)

## இங்கிலா… கா…

### 100 இற்கும் மேற்…



(லண்டன்)

### இங்கிலாந்தின் சர்… காமனில் காட்டுத்தீ ஏ…

140 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தை உள்ளடக்கிய பகுதியில் காட்டுத்தீயால் வீடுகளிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

சுமார் 100 குடியிருப்பாளர்கள் கடந்த வெள்ளிக்கிழமை வெளியேற்றப்பட்டனர். அத்துடன் காற்றில் புகை கலந்துள்ளதால் குறித்த பகுதியிலிருந்து விலகி இருக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொரோனா பரி… சபரிமலை ஐய…



## வெள்ளை மாளிகைக்கு அருகே… ஊடகவியலாளர் சந்திப்பிலிருந்து வெ…



(வோஷிங்டன்)

வெள்ளை மாளிகைக்கு அருகே துப்பாக்கிச்சூடு நடந்தப்பட்டதால் ஊடகவியலாளர்கள் சந்திப்பில் இருந்து ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உடனடியாக வெளியேறினார்.


வெள்ளை மாளிகை அமெரிக்காவின் தலைநகர் வோஷிங்டனில் அமைந்துள்ளது. அமெரிக்க ஜனாதிபதியின் அதிகாரபூர்வ இல்லம் என்பதால் இந்த மாளிகையைச் சுற்றிலும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருக்கும். 24 மணி நேரமும் சிறப்பு பயிற்சி பெற்ற வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருப்பார்கள்.

இந்த நிலையில், வெள்ளை மாளிகை பகுதி அருகே ஆயுதங்களுடன் மர்ம நபர் நடமாடியுள்ளார். இதனையடுத்து, இரகசிய சேவை பாதுகாப்புப் படையினர் அந்த நபர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த மர்ம நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக

# வெளிநாடு

## லாந்து சர்ரே பகுதியில்
## காட்டுத் தீ பரவல்
### மேற்பட்ட குடும்பங்கள் வெளியேற்றம்

**ின் சர்ரே பகுதியில் சோபாம்**
**த்தீ ஏற்பட்டுள்ளது.**

லத்தை
தீயால்
யேற்றப்

கடந்த
ட்டனர்.
ளதால்
இருக்கு

கடந்த வெள்ளிக்கிழமை சோபாம் காமனில் இருந்து ஒரு பெரிய புகை மண்டலம் எழுந்ததையடுத்த பல தீயணைப்புக் குழுவினர் அங்கு அனுப்பப்பட்டனர்.

இதையடுத்து அங்கிருந்த மக்களை கடந்த வெள்ளிக்கிழமை மாலை தமது வீடுகளை விட்டு வெளியேறும்படி கூறப்பட்டது. தீயணைப்பு பணியில் 40 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

குறித்த காட்டுத் தீ வென்ட்வொர்த் கோல்ப் மைதானத்திற்கும் பரவியுள்ளது. தீ விபத்துக்குப் பின்னர் ரோஸ் லேடீஸ் சீரிஸ் கோல்ப் போட்டியின் இறுதிப் போட்டி இடைநிறுத்தப்பட்டுள்ளது. காட்டுத்தீ ஏற்பட்டுள்ள இடத்தை சுற்றியுள்ள பல வீதிகள் மூடப்பட்டுள்ளன. மேலும் மக்கள் தங்கள் சொந்தப் பாதுகாப்பிற்காக இப்பகுதியைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். தீக்கான காரணம் இன்னும் அறியப்படவில்லை.

ஆனால் தீவிர வெப்பநிலை தொடர்ந்து வருவதால், தீ மூட்டி எரித்தல் அல்லது கிராமப்புறங்களில் உணவுகளை தீயில் சுடுதல் போன்ற தேவையற்ற தீகளை ஏற்படுத்த வேண்டாம் என மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (2)

## பரிசோதனை சான்றிதழ் இருந்தால்
## ஐயப்பனைத் தரிசிக்க அனுமதி



கொரோனா வைரஸ் தொற்று பரவலை அடுத்து கட்டுப்பாடுகளுடன் சபரிமலை ஐயப்பன் கோவில் திறக்கப்படவுள்ளது. இதன்படி சபரிமலை ஐயப்பன் கோவிலுக்கு வருகைதரும் பக்தர்கள் அனைவரும் கொரோனா பரிசோதனை செய்திருக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த பரிசோதனை சான்றிதழ்களையும் உடன் கொண்டுவர வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சபரிமலை ஐயப்பன் கோயிலில் பக்தர்களை அனுமதிக்கலாமா என்பது குறித்து நடைபெற்ற கூட்டத்திற்குபின் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேற்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. "சபரிமலையில் ஒரு நிபந்தனையோடு பக்தர்களை அனுமதிக்க முடிவு செய்துள்ளோம். அதன்படி சம்பந்தப்பட்ட நபர் தனக்கு கொரோனா இல்லை என்பதை உறுதி செய்யும் பரிசோதனை மேற்கொண்டு அந்த சான்றோடு வந்தால் நிச்சயம் அனுமதிக்கப்படுவார்கள்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

## ருகே துப்பாக்கி வேட்டு;
## து வெளியேறினார் ட்ரம்ப்

குதி
மாடி
வை
பாக்

நபர்
தாக



முதற்கட்ட தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில், வெள்ளை மாளிகையில் தனது வழக்கமான ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்ட ட்ரம்ப், உடனடியாக அங்கிருந்து வெளியேறினார்.

சிறிது நேரத்தின் பின்னர் ஊடகவியலாளர்களைச் சந்தித்த ட்ரம்ப், "வெள்ளை மாளிகைக்கு வெளியே துப்பாக்கிச்சூடு நடைபெற்றது. ஒரு நபரை தவிர வேறு எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

ஆயுதங்களுடன் வந்ததால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. காயமடைந்த நபர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்" என தெரிவித்தார். (2)

## பெய்ரூட் வெடிப்பு விவகாரம்;
## லெபனான் அரசு இராஜினாமா


(பெய்ரூட்)

லெபனான் தலைநகர் பெய்ரூட்டின் கடந்த நான்காம் திகதி இடம்பெற்ற கொடூர வெடி விபத்து சம்பவத்திற்கு அரசாங்கம் மற்றும் அரச அதிகாரிகளின் அலட்சியமே காரணம் என்று பெய்ரூட் மக்கள் குற்றம்சாட்டியுள்ளதுடன் அரசின் அலட்சியப் போக்கை கண்டித்து வீதிகளில் இறங்கி போராடி வருகின்றனர். இதன் உச்சக்கட்டமாக லெபனான் அரசாங்கம் இராஜினாமா செய்வதாக நேற்று முன்தினம் மாலை அறிவித்துள்ளது.

பிரதமர் ஹசன் டயப் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை அந்நாட்டு தேசிய தொலைக்காட்சியில் மக்கள் சந்திப்பை மேற்கொண்டு இந்த அறிவிப்பு விடுத்துள்ளார். இதன்போது, "ஏழு ஆண்டுகளாக தலைமறைவாக இருந்த பேரழிவிற்கும் உண்மையான மாற்றத்திற்கான அவர்களின் விருப்பத்திற்கும் பொறுப்பானவர்களைப் பொறுப்பேற்க வேண்டும் என்ற அவர்களின் கோரிக்கையில் மக்களின் விருப்பத்தை இன்று நாங்கள் பின்பற்றுகிறோம்" என்று கூறினார்.

லெபனான் தலைநகர் பெய்ரூட்டின் துறைமுகக் கிடங்கில் வைக்கப்பட்டிருந்த 2,750 தொன் அம்மோனியம் நைட்ரேட் வெடித்து சிதறியதில் நேற்று முன்தினம் வரை 220 பேர் வரை பலியாகியதுடன் 110 பேர் இன்னும் காணாமல் போயுள்ளதாக பெய்ரூட் நகர ஆளுநர் மர்வான் அபூத் அல்-மார்சாட் தெரிவித்துள்ளார். அத்துடன் 6 ஆயிரத்துக்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர். மேலும் இந்த வெடிவிபத்தில் சுமார் 3 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் வீடுகளை இழந்து உணவு கிடைக்காமல் வீதிகளில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் அரசை எதிர்த்து அந்நாட்டு மக்கள் தொடர்ந்து மூன்று நாட்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கடும் பொருளாதார நெருக்கடியில் உள்ள லெபனான் அரசு பொதுமக்களுக்கு உரிய நிவாரணம் அளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நிலைமையைச் சமாளிக்க முடியாததன் காரணமாக தற்போது லெபனான் அரசு இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளது. (2)

# முன்னாள் உறுப்பினர்கள் ஓய்வூதியத்தை இழந்தனர்

(கொழும்பு)

**கடந்த அரசாங்கத்தில் பாராளுமன்றத்திற்கு தெரிவான உறுப்பினர்கள் சிலர் அவர்களுக்கான ஓய்வூதியத்தை இழந்துள்ளனர்.**

பாராளுமன்ற உறுப்பினர் பதவியை 5 வருட காலங்கள் பூர்த்தி செய்யாதவர்களே இவ்வாறு ஓய்வூதியத்தை இழந்துள்ளனர்.

ஓய்வூதியம் பெற தகுதி பெற்ற உறுப்பினர் ஒருவர் தொடர்ந்து 5 வருடங்கள் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப் படுத்தியிருக்க வேண்டியது கட்டாயமாகும்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் மக்களின் வாக்குகள் மற்றும் தேசிய பட்டியலில் புதிய உறுப்பினர்களாக பலர் தெரிவாகிய நிலையில், அவர்கள் 4 வருடங்களும் 8 மாதங்களுமே பாராளுமன்றத்தில் உறுப்பினர்களாக செயற்பட்டுள்ளனர்.

5 வருடங்கள் முழுமையாக பாராளுமன்ற உறுப்பினராக செயற்பட்டவர்களுக்கு உறுப்பினர் பதவியின் சம்பளத்தில் மூன்றில் ஒரு பகுதி ஓய்வூதியமாக கிடைக்கும்.

அவ்வாறு ஓய்வூதியம் இழந்தவர்களில் அதிகமானவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தியவர்களாவர். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்கள் இருவரும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் 4 பேரும் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் ஒருவரும் ஓய்வூதியத்தை இழந்துள்ளனர்.

அதற்கமைய ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப் படுத்திய மலிக் சமரவிக்ரம, ஹிருணிகா பிரேமசந்திர, சதுர சேனாநாயக்க, ஆனந்த அளுத்கமகே, பந்துலால் பண்டாரிகொட, சந்திம கமகே, கருணாரத்ன பரணவிதான, தயா கமகே, ஆசு மாரசிங்க, சமன் ரத்னபிரிய, நடராஜா திலகேஷ், எஸ். வேலுகுமார், மொஹமட் மன்சூர், சிசிர குமார, ரஹ்மான் இஸ்னாத், நாலக கொலென்னே, துசிதா விஜேமான்த, சந்தித் சமரசிங்க, எம். நவாவி, எம்.சமல்மன், ஏ.ஹசிப் ஆகிய உறுப்பினர்களே இவ்வாறு ஓய்வூதியத்தை இழந்துள்ளனர்.

பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னர் உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்த பேராசிரியர் ஜயம்பதி விக்ரமரத்னவும் ஓய்வூதியத்தை இழந்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பிரேமரத்ன, மனோஜ் சிறிசேன மற்றும் தேசிய பட்டியல் உறுப்பினரான மிலத் ஜயதிலக்க ஆகியோரும் இம்முறை தெரிவாகாமையினால் அவர்களும் ஓய்வூதியத்தை இழந்துள்ளனர்.

மக்கள் விடுதலை முன்னணியின் நளிந்த ஜயதிஸ்ஸவும் ஓய்வூதியத்தை இழந்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில், சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் சி.சிவமோகன், கவிந்திரன் கோடீஸ்வரன், ஈ. சரவணபவன் ஆகியோரும் ஓய்வூதியத்தை இழந்துள்ளனர். (ஜ-4)

# ஐக்கிய தேசியக் கட்சியை வழி நடத்த நான் தயார்

## ருவான் விருப்பம்

(கொழும்பு)

கட்சி உறுப்பினர்கள் என்னை விரும்பினால் ஐக்கிய தேசியக்கட்சியை வழிநடத்த தயாரென அக்கட்சியின் துணை பொதுச் செயலாளர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.



நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் ருவான் விஜேவர்தன மேலும் கூறியுள்ளதாவது, "நாட்டு மக்களின் இதயங்களை வென்றெடுக்கக்கூடிய ஒருவரை கட்சியின் புதிய தலைவராக உறுப்பினர்கள் தெரிவு செய்ய வேண்டும்.

மேலும் தேசிய பட்டியல் ஊடாக பாராளுமன்றத்திற்கு நியமிக்கும் நபருக்கும் இது பொருந்தும்.

அந்தவகையில் தலைமை மற்றும் தேசியப் பட்டியல் இரண்டையும் பொறுத்தவரை கட்சி சரியான தீர்மானத்தை எடுக்குமென நான் நினைக்கின்றேன்.

அத்துடன் கட்சி உறுப்பினர்கள் என்னை விரும்பினால் கட்சியை வழிநடத்த தயாராக இருக்கின்றேன்.

ஆனால் தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்றத்திற்கு செல்ல நான் விரும்பவில்லை" என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நம்பிக்கையே குரு...

"மார்பா" என்று ஒருத்தர் திபெத் நாட்டிலே இருந்தார். அவர் ஒரு எளிமையான ஆசாமி. அவருக்கு ஞானமார்க்கத்திலே போக வேண்டும் என்று ஆசை. அதனாலே ஒரு குருவைத் தேடிப்போனார். குருவே நான் என்ன செய்யவேண்டும் சொல்லுங்கள் என்று கேட்டார். எப்போது நீ என்னிடம் சரணாகதி அடைந்தாயோ.. இனிமேல் உனக்கு எந்தக் கஷ்டமும் இல்லை. நீ செய்ய வேண்டியது வேறு ஒன்றும் இல்லை. என்னை பரிபூரணமாக நம்பு. என்னுடைய பெயர் தான் உனக்கு மகா மந்திரம். எந்தக் கஷ்டம் வந்தாலும் என் பெயரைச் சொல்லு சரியாகப் போய் விடும் என்றார் குரு. உடனே அந்த சீடர் அவர் காலிலே விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டு புறப்பட்டார். குருநாதர் பெயரைச் சொல்லிக் கொண்டு போகின்றார். அவர் போவதைப் பார்த்த சில பேர் மறுபடியும் குருவிடம் ஓடி வந்தார்கள். குருவே, சற்று முன்னாடி உங்களிடம் ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டு போனானே ஒரு ஆள் . அவன் தண்ணீர் மேலே நடந்து போய்க் கொண்டிருக்கின்றான் என்றார் ஆச்சரியமாக ....குருவிற்கு அதை விட ஆச்சரியம் என்ன? தண்ணீர் மேலே நடக்கின்றானா? நம்பவே முடியவில்லை என்றார். உடனே புறப்பட்டு ஆற்றங்கரைக்குப் போனார். அங்கே போய்ப் பார்த்தார். நிஜமாகவே அந்த ஆள் தண்ணீர் மேலே நடந்து போய்க் கொண்டிருக்கின்றார். பளிங்குத் தரையிலே நடப்பது போல் அவர் பாட்டுக்குப் போய்க் கொண்டிருக்கின்றார். நடு ஆற்றிலே போய் நின்று கொண்டு நடனம் வேறு ஆடுகின்றார். ஆற்றிலே இரண்டு கரையிலேயும் ஏகப்பட்ட கூட்டம். எல்லோரும் இதை அதிசயமாக வேடிக்கை பார்க்கின்றார்கள். குரு உடனே அந்த ஆளை கரைக்குக் கூப்பிட்டார். அவரும் வந்து சேர்ந்தார். " என்னப்பா இரகசியம் இது? எப்படி நீ நடந்தே தண்ணீர் மேலே?" என்றார் குரு. இதிலே இரகசியம் ஏது சுவாமி. எல்லாம் உங்கள் அருள் தான். நீங்கள் தானே சொன்னீர்கள் எதுவாக இருந்தாலும் என் பேரைச் சொல்லு என்று. அது தான் இங்கே வந்ததும் பார்த்தேன். படகு ஏதும் கிடைக்கவில்லை. உடனே உங்க பேரைச் சொல்லிக் கொண்டே நடக்க ஆரம்பித்தேன் என்றான்.

குருவாலே இதை நம்ப முடியவில்லை. நம்முடைய பெயருக்கு இவ்வளவு சக்தி இருக்கா? என்று அவருக்கு ஆச்சரியம். மறுபடியும் அதை சோதித்துப் பார்க்க வேண்டும் என்று ஆசை அவருக்கு.

"சீடனே... உன்னுடைய குரு பக்தியை மெச்சினேன்... இப்பொழுது நான் உன்னை மலை மேலேயிருந்து கீழே குதி என்றால் கூட குதித்து விடுவாயா?" என்றார். உடனே அவர் ஒரு மலை மேலே ஏறி கீழே குதித்துவிட்டார். எல்லோரும் பதறிப் போய் அவன் விழுந்த இடத்திற்கு ஓடிப் போய்ப் பார்த்தார்கள். அந்த சீடன் சிறு காயம் கூட இல்லாமல் நின்று கொண்டிருந்தான். என்னப்பா இது இப்பொழுதும் என்னுடைய பெயரையா சொல்லிக் கொண்டிருந்தாய்? என்றார் குரு..ஆமாம்! என்றார் சீடர். "சரி... அப்படி என்றால் இதிலே ஏதோ விடயம் இருக்கின்றது.. அதனாலே நானே சோதித்துப் பார்க்கின்றேன். என்று சொல்லி அந்த குரு, பக்கத்திலே இருந்த ஒரு குளத்திலே இறங்கி தண்ணீர் மேலே நடப்பதற்கு அடி எடுத்து வைத்தார். அவ்வளவு தான். திடீர் என்று உள்ளே போய்விட்டார். தண்ணீரைக் குடிக்க ஆரம்பித்துவிட்டார்.

எல்லோரும் கரையிலே நின்று கொண்டு கத்த ஆரம்பித்து விட்டார்கள். உடனே இந்த சீடரே அமைதியாக தண்ணீர் மேலே நடந்து போய் குரு கையைப் பிடித்து கரைக்கு இழுத்துக் கொண்டு வந்தார்.

"என்ன மன்னிச்சுடப்பா... நான் உண்மையான குரு இல்லை... நான் ஒரு போலி ஆசாமி." அப்படி என்றார் குரு.

அது எப்படிங்க... நீங்கள் அப்படி இருந்தால் உங்கள் பெயருக்கு இவ்வளவு சக்தியா? "என்றார் அவர். இப்பொழுது அந்த குரு சொல்கின்றார். "அப்படி இல்லையப்பா என் பெயரிலே ஒன்றுமே இல்லை. இந்த அற்புதங்களைச் செய்தது என்னுடைய பெயர் இல்லை. உன்னுடைய நம்பிக்கை" என்றார்.

"நான் சொன்னதை சந்தேகப்படாமல் முழுதாக நம்பினாய். அந்த நம்பிக்கை தான் உன் சக்திக்குக் காரணம்" என்றார் "உனக்குச் சொன்னதை நான் நம்பவில்லை... என்னையும் நான் நம்பவில்லை..." அதனாலே தான் நான் தண்ணீருக்குள் மூழ்கிப்போனேன். நான் உனக்கு குருவாக இருக்க தகுதி இல்லாதவன். என்னை மன்னித்துவிடு என்று சொல்லி புறப்பட்டுப் போய் விட்டாராம்.

இந்த ஜென் கதையிலிருந்து என்ன தெரிகிறது? நாம் வைக்கின்ற நம்பிக்கை இருக்கு பாருங்க.. அது தான் நமக்குக் குரு. இந்தக் காலத்துக் குரு ஒருத்தன் சீடனிடம் சொன்னார்." எப்பப் பார்த்தாலும் என் காலடியிலேயே உட்கார்ந்திருக்கின்றாயே என்னப்பா காரணம்?" என்று கேட்டார். நம்பிக்கை தான் காரணம் என்றான் சீடன். என்ன நம்பிக்கை? என்றார் குரு. அதற்கு அந்த சீடன். என்றைக்காவது ஒரு நாள் செத்துப்பாய் விடுவீர்கள் உங்க ஆசனத்திலே நான் உட்காரலாம் என்கின்ற நம்பிக்கை தான் என்று கூறினான்.

# அமைச்சர் பதவியை ஏற்குமாறு பிள்ளையானுக்கு அழைப்பு



(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளியும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தனை (பிள்ளையான்), கண்டியில் நடைபெறும் பதவியேற்பு விழாவில் கலந்துகொண்டு, அமைச்சர் பதவியை ஏற்குமாறு அழைக் கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

எனினும் அவருக்கு எந்த பதவி வழங்கப்படும் என்பது தொடர்பாக இன்னும் தெரியவில்லை என்றும் அது அமைச்சரவை அல்லது அமைச்சரவை அல்லாத பதவியாக இருக் குமா? என்றும் பிள்ளையானுக்கு நெருக்கமான வட்டாரம் தெரிவித்துள்ளதாக ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

நடந்து முடிந்த 2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில், பிள்ளையான் 54,198 வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளார்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில், பிள்ளையான் விளக்கமறியலில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## சீனாவின் பெயரைக் குறிக்கும் கட்டடம் மக்கள் மத்தியில் பெரும் விசனம்


(கொழும்பு)

"சீனா" என்ற வார்த்தையின் வடிவத்தில் அம்பாந்தோட்டையில் அமைந்துள்ள ஒருகட்டடத்தைக் காட்டும் செயற்கைக் கோள்படம் சமூக ஊடகங்களில் தற்போது வைரலாகி வருகிறது.

அம்பாந்தோட்டை மிரிஜஜவல-சூரியவெவ வீதியில் அமைந்துள்ள சீனாவின் இலங்கைத் துறைமுக சேவையால் நிர்வகிக்கப்படும் கட்டடமொன்றே இவ்வாறு 'சீனா' என்ற வார்த்தையின் வடிவத்தில் அமைக்கப்பட்டு வருகிறது.


இந்த வரைபடங்கள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே நாட்டின் பல இடங்களில் உள்ள வீதியைக் குறிக்கும் பெயர்ப்பலகையில் சீன மொழியில் எழுதப்பட்டமை குறித்து சர்ச்சைகள் எழுந்திருந்த நிலையில், தற்போது இந்த




விடயம் மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (ஐ-4)

## தொழிலாளர் குடியிருப்புகளில் தீ



(கொழும்பு)

லிந்துலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பம்பரக்கலை மத்திய பிரிவில் நேற்று முன்தினமிரவு ஏற்பட்ட தீ விபத்தில் 24 தொழிலாளர் குடியிருப்புகள் முற்றாக தீக்கிரையாகியுள்ளன.

இந்தக் குடியிருப்புகளில் குடியிருந்த 24 குடும்பங்களை சேர்ந்த 70 பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

இத் தீ விபத்து மின்சார ஒழுக்கு காரணமாக ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் தெரிவிப்பதுடன் இது தொடர்பான விசாரணைகளையும் சேதவிபரங்கள் தொடர்பாகவும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ-4)

# இலங்கை-மியன்மாருக்கிடையே நேரடி விமான சேவை ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கை - மியன்மார் நாடுகளுக்கு இடையில் நேரடி விமான சேவையை ஏற்படுத்துவது குறித்து மியன்மார் எயர்வேஸ் இன்டர்நஷனலின் உயர் நிர்வாகத்துடன் மியான்மாருக்கான இலங்கையின் தூதுவர் கலந்துரையாடியுள்ளார்.

இலங்கைக்கும், மியன்மாருக்கும் இடையில் நேரடி விமான இணைப்பை ஏற்படுத்துவதற்கான நோக்கத்துடன் மியன்மாருக்கான இலங்கைத் தூதுவர் நளின் டி சில்வா மியன்மார் எயார்வேஸ் இன்டர்நஷனலின் உயர் நிர்வாகத்துடன் அண்மையில் ஒரு சந்திப்பை நடத்தியுள்ளார்.

இதன்மூலம் இரு இடங்களிலும் சுற்றுலாத் தொழில்களை மேம்படுத்த முடியுமெனவும், இரு நாடுகளுக்கும் இடையிலான பயணிகளின் நேர விரயத்தை குறைக்க முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வரலாற்று, கலாசார மற்றும் மத உறவுகளால் ஆதரிக்கப்படும் இந்த இரண்டு நாடுகளுக்குமிடையில் கணிசமான அளவு போக்குவரத்துச் சேவை இதனால் நடைபெறுமென மியன்மாருக்கான இலங்கையின் தூதுவர் இதன்போது கூறியுள்ளார்.

இரு நாடுகளின் மத முக்கியத்துவத்திலிருந்து பொருளாதார நன்மைகளைப் பெறும் நோக்கில் கொழும்பு - யாங்கூன் - புத்தகாயா அல்லது கொழும்பு - யாங்கூன் - காத்மண்டு ஆகியவற்றை இணைக்கக்கூடிய ஒரு விமான சேவையை ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயவிருப்பதாகவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார். (ஐ-4)

## நல்லூர்க் கந்தனுக்கு இன்று கார்த்திகைத் திருவிழா



### கார்த்திகை ஊர்தியில் காவல் செய்யவருக

கார்த்திகை நாதனே காத்திட வேண்டும்
காரியம் யாவும் நிறைவேற்றிட வேண்டும்
நேர்த்திகள் உனக்கு ஆயிரம் வைத்தோம்
நிரந்தர தீர்வினைத் தந்திட வேண்டும்
ஏந்தியே நாளும் முறையிட்டுக் கேட்கிறோம்
எங்களின் கோரிக்கை ஏற்றிட வேண்டும்
போற்றியே உன்னைத் துதித்திட வேண்டும்
புதியதோர் தீர்வது தமிழர்க்கு வேண்டும்

-காரை. மதுரகவி-

### பக்தருக் கருள்வாய்

பன்னிருகை வேலவா
பழனிமலை ஆண்டவா
பச்சை மயில் வாகனா
பக்தர் குறை தீர்ப்பவா
நல்லை நகர் முருகா
நயினை அம்மன் பாலகா
வள்ளி மணவாள வள்ளல் குமரேசா
சக்தி உமை பாலகா சண்முக வேலா
நோய் நொடியைத் தீர்ப்பவா
நோயின்றி வாழவே
பன்னிருகை வேலா
பக்தருக் கருள் வாயே

க. ரஞ்சிதா
மாவிட்டபுரம்

### வேல்கொண்டு வினை தீரும் ஐயா

சரவணப் பொய்கையில் உதித்த ஆறுமுகனே
தேவர்களை காத்த தேவ சேனாதிபதியே
சிவனுக்கே உபதேசித்த சிவகுரு நாதனே
நல்லை திருவிழா பூண்ட நல்லை நாயகனே
நாற்புறமும் அடியவர்களின் அரோகரா முழங்க
வேல் கொண்டு வினை தீர்க்க விரைந்து வருகிறான்
வேலனின் பாதம் நிதமும் பணிந்திடுவோம்
அறுதினமும் வெற்றியும் ஆசியும் பெற்றிடுவோம்.

ச.கெஜகதாரணி, கைதடி

### சந்தம் சிந்தும் நல்லைக் கந்தன்

ஆண வத்தி லகந்தை கொண்டு
ஆர்ப் பரிக்கும் யாரையும்
காண வேயெம் கண்முன் னாலே
கருவ றுப்பான் வேரையும்
மாண் புடனே நன் நெறியில்
மருவி வாழும் பேரையும்
பூண்டி டுவான் ஆண்டி டுவான்
போற்றும் நல்லைக் கந்தனே!

கலாபூஷணம் சந்தக்கவிஞர்.
நவ. பாலகோபால்



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

41

## கலாநிதி முருகர் குணசிங்கம்

அவ்வாறான நாடுகளின் செயற்பாடுகள் பிழையானது. நியாயம் நீதி அற்றது என்பதனை ஜனவரி 2010 இல் இடம் பெற்ற டப்ளின் சுயாதீன நீதிமன்றத் தீர்ப்பும் டிசெம்பர் 2013 இல் இத்தாலி உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையத்தின் பல்வேறுபட்ட அறிக்கைகளும் சாட்சியம் அளிக்கின்றன.

ஈழத்தமிழர்களின் தனித்துவமான மனிதநேயப் போக்கும் அவர்களின் பண்பாட்டு வாழ்க்கை முறையும் குடும்பமாகவும் சமூகமாகவும் இணைந்து வாழும் தன்மையும் தமது தனித்துவங்களையும் அடையாளங்களையும் ஒருமைப்பாட்டையும் ஒருங்குசேரக் கட்டிக் காக்கும் போக்கும் தமது சமய, நம்பிக்கைகளை மதித்துப் பின்பற்றி வாழும் நெறிமுறையும் மாற்று இனத்தவர்களது கலாசாரம், விழுமியங்களை மதித்து உள்வாங்கும் பரந்த போக்கும் அவர்களை தாம் புலம்பெயர்ந்த நாடுகளில் ஒரு நல்ல சமூகமாகத் தலை நிமிர்ந்து வாழ வைத்துள்ளது என்பதனையே பொதுவாகப் பார்க்க முடிகிறது.

அவ்வாறாகத் தம் குடும்ப வாழ்க்கையையும் சமூக வாழ்க்கையையும் பொது வாழ்க்கையையும் பலப்படுத்துவதில் முதலாவது தலைமுறையினர் பல சவால்களையும் அர்ப்பணிப்புக்களையும் தியாகங்களையும் சமய, மொழி, பண்பாடு, கல்வி, தொழில், அரசியல் சார்ந்த பல்வேறு துறைகளில் சாதித்து ஒரு குறுகிய காலத்திற்குள் தமது இரண்டாவது தலைமுறையினரை ஒரு கௌரவமான உயரிய நிலைக்கும் கொண்டு வந்துள்ளனர்.

அவ்வாறான அவர்களின் செயற்பாடுகள், சாதனைகள் பற்றிச் சுருக்கமாகக் கோடிட்டுக் காட்டுவது மிகவும் பொருத்தமானதாகும்.

மேற்கண்ட நாடுகளில் வாழும் ஈழத் தமிழர்களுள் சுமார் 90 விழுக்காட்டினர் இந்து மதத்தின் ஒரு பிரிவான சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள் என்பதனைப் புள்ளி விபரங்கள் மூலம் அறிய முடிகிறது.

சைவ சமயம் மனித வாழ்க்கைக்குத் தேவையான அறம், தர்மம், நீதிநெறி, ஒழுக்கம் போன்ற விழுமியங்களைப் போதித்து மக்களை நல்வழிப்படுத்துவதை நோக்கமாகவும் கோட்பாடாகவும் கொண்டு விளங்குகிறது.

அத்தோடு கலை, பண்பாடு, பாரம்பரியங்கள் சார்ந்த விழுமியங்களைத் தன்னகத்தே உள்ளடக்கி இருக்கின்றது. ஈழத்தமிழர்களுள் பெரும்பான்மையினர் சைவ சமயத்தையும் அதன் நெறிமுறைகளையும் தழுவி வாழ்பவர்கள்.

மேற்கண்ட நாடுகளுக்கு அவர்கள் புலம்பெயர்ந்து சென்றபோது அந்நாடுகளில் சைவக் கோயில்கள் கிடையாது. எனவே தமது சைவ நெறிமுறைகளைத் தழுவி வாழ்வதன் பொருட்டும் தமது பிள்ளைகளுக்கு சைவ நெறிமுறைகளைப் போதித்து நெறிப்படுத்துவதற்கும் தமது கலை, பண்பாடு, பாரம்பரியங்களைப் பேணிக் காப்பதற்கும் அவர்கள் தம்மைப் பல வழிகளிலும் அர்ப்பணிக்க வேண்டியவர்களாகக் காணப்பட்டனர்.

1980களில் மேற்கண்ட நாடுகளுக்கு வந்த ஈழத்தமிழர்கள் தமது வீடுகளில் பூசை அறைகள் அமைத்து தமது குடும்பத்தினருடனும் நெருங்கிய உறவினர்களுடனும் இணைந்து சைவ சமயக் கடவுள் சிலை வழிபாடுகளைச் செய்யத் தொடங்கினர்.

தொழிற்சாலைப் பகுதிகளில் சில சிறிய இடங்களை வாடகைக்கு எடுத்து அங்கு தமது கடவுள்களின் சிலைகளை வைத்து பல குடும்பங்கள் சேர்ந்து கடவுள் வழிபாடுகளை விரிவுபடுத்தினர்.

காலப்போக்கில் தற்காலிகக் கோயில்களில் சேர்க்கப்பட்ட காணிக்கைகளுடன் பல நன்கொடைகளையும் பெற்று ஒரு நிலத்தை வாங்கி கடந்த 25 ஆண்டுகளில் சிறியதும் பெரியதுமாக நூற்றுக்கும் மேற்பட்ட கோயில்களைக் கட்டி சமய வழிபாடுகளைச் செய்து வருகின்றார்கள்.

திருவிழா நாட்களில் பூசைகள் சிறப்பாகவும் விமர்சையாகவும் நடைபெற்று வருகின்றன. அக்கோயில்களிலேயே தமிழ்மொழி, நாட்டிய வகுப்புகளும் இளம் தலைமுறையினருக்குப் பயிற்றுவிக்கப்படுகின்றது.

கலாசார நிகழ்வுகள், திருமண வைபவங்களும் வழமையாக நடைபெறுகின்றன. எல்லாவற்றிற்கும் அப்பால் தமது தாய்நாட்டில் பல மறுவாழ்வுப் பணிகளையும் ஆதரவு அற்ற குழந்தைகள், வயோதிபர்கள் போன்றோர்களைப் பராமரிக்கும் நிறுவனங்களுக்கு நிதி உதவியும் செய்து வருகின்றார்கள்.

ஆனால் சில குறிப்பிட்ட கோயில்களே சமூகநலச் சேவைகளைத் தமது தாய் நாட்டில் செய்து வருகின்றன. பல கோயில்கள் இலாப நோக்கத்தில் இயங்கி வருவதையும் காண முடிகிறது. அவ்வாறான கோயில் உரிமையாளர்கள் பெரும் செல்வந்தர்களாகவும் காணப்படுகின்றார்கள்.

ஒட்டுமொத்தத்தில் சகலரும் ஒன்று கூடுகின்ற கலாசார மையமாகக் கோயில்கள் காணப்படுகின்றன.

ஈழத்தமிழரின் தேசிய அடையாளத்தையும் ஒருமைப்பாட்டையும் காட்டி நிற்பதோடு பண்பாட்டுக் கலாசார விழுமியங்களைப் பாதுகாக்கும் மையப் பகுதியாகவும் கோயில்கள் திகழ்கின்றன.

ஈழத்தமிழர்கள் மேற்கண்ட நாடுகளில் உள்ள அரச சார்பான சமூக சேவை நிறுவனங்கள், கல்வி நிலையங்களில் அந்தந்த நாடுகளில் பேசப்படுகின்ற மொழிகளைக் கற்க வேண்டிய கட்டாய நிலைப்பாட்டில் காணப்பட்டனர்.

அம்மொழிகளில் தேர்ச்சி பெற்றால் தான் தொழில்களைப் பெறக்கூடிய வாய்ப்புகளும் தம் பிள்ளைகளைக் கல்வியில் ஊக்குவிப்பதற்கும் தமது அன்றாட வாழ்க்கைப் பிரச்சினை, சமூகப் பிரச்சினைகளை அந்த நாட்டு அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு சுமுகமாகத் தீர்ப்பதற்கும் வழி பிறக்கும் என்பதில் மிகவும் தெளிவாகவும் அக்கறையுடனும் இருக்கின்றார்கள்.

கடந்த கால் நூற்றாண்டில் அதிகப்சமான ஈழத்தமிழர்கள் அந்நாட்டு மொழிகளில் சரளமாகப் பேசும் அளவிற்குத் தேர்ச்சி அடைந்து உள்ளார்கள்.



20 விழுக்காட்டினர் அந்த நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர்ந்து தொழில் சார் கல்வியையும் பட்டப் படிப்பையும் வெற்றிகரமாக முடித்து இருக்கின்றார்கள்.

தமது கல்வியினூடாக அரச, தனியார் துறைகளில் கௌரவமான தொழில்களைப் பெறக் கூடியதாகவும் இருந்தது. குறிப்பிடத்தக்க தொகையினர் மொழி பெயர்ப்பாளர்களாகவும் காணப்படுகின்றார்கள்.

ஆனால் இரண்டாவது தலைமுறையினர் தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை அந்தந்த நாட்டு மொழிகளில் கல்வி வாய்ப்பினைப் பெற்று வருகின்றார்கள்.

அப்பள்ளிகளில் ஆங்கிலமும் கட்டாயப் பாடமாகப் போதிக்கப்படுகிறது. அத்துடன் தமிழ் மொழியையும் அரச பள்ளிகளில் போதிக்கக்கூடிய வசதிகளையும் அந்த நாட்டுக் கல்வி இலாகா செய்து கொடுத்துள்ளது.

அவர்களுக்கு அம்மொழிகளில் தேர்ச்சி பெறுவதற்கு நல்வாய்ப்பாக அமைந்துள்ளது. ஈழத்தமிழர்கள் தமது தாய் மொழியைத் தமது உயிருக்கு மேலாக நேசிக்கும் மொழிப் பற்றுக் கொண்டவர்கள்.

புலம்பெயர் நாடுகளில் வசிக்கின்ற தமது பிள்ளைகளுக்குத் தமிழ் மொழியைக் கற்றுத் தருவதற்காகத் தம்மை முற்றும் முழுவதுமாக அர்ப்பணித்து வருகின்றார்கள்.

அத்தனை தமிழ்ப் பள்ளிகளிலும் ஆண்டுதோறும் கலை விழாக்கள் நடைபெறுகின்றன. பேச்சுப் போட்டிகள், நாடகம், நாட்டியம் அவற்றிற்கான பரிசு வழங்கும் நிகழ்ச்சிகளையும் நடத்தி மாணவர்களை ஊக்கப்படுத்தி வருகின்றனர்.

ஈழத்தமிழர்கள் அனைவரும் வார இறுதி நாட்களில் ஒன்று கூடுகின்றமையும் இளம் தலைமுறையினரைப் பயிற்றுவிப்பதும் அவர்களுக்கு இடையில் ஓர் இறுக்கமான பிணைப்பினையும் ஒற்றுமையையும் ஒருங்கிணைப்பையும் ஏற்படுத்தி வருகின்றது.

தமிழ் மொழி நிகழ்வுகளின் வழியாகத் தமிழர் என்ற அடையாளத்தையும் தமது தனித்துவத்தையும் பேணிக் காக்கக் கூடிய வாய்ப்புகளும் அவர்களுக்குக் கிடைத்து உள்ளன. அதன் வழியாக அவர்களின் தேசிய விடுதலைக்கு மாபெரும் மக்கள் சக்தியினையும் வழங்கி வருகின்றது.

ஆங்கிலம் நடைமுறையில் இல்லாத நாடுகளில் உள்ள தமிழ் இளம் தலைமுறையினர் பெரும்பாலும் தமிழ் மொழியில் சரளமாகப்பேசக் கூடியவர்களாகவும் ஓரளவு எழுத வாசிக்கக் கூடியவர்களாகவும் காணப்படுகின்றார்கள்.

ஆனால் ஆங்கிலமொழி பேசுகின்ற பிரித்தானியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளில் உள்ள தமிழ் இளம் தலைமுறையினர் தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்று தமிழில் பேசுகின்ற அல்லது எழுதி வாசிக்கின்ற நிலைமை ஒப்பீட்டளவில் குறைவாகவே காணப்படுகின்றது.

விதிவிலக்காக கனடா நாட்டில் உள்ள தமிழ் இளம் தலைமுறையினர் அங்குள்ள தமிழ் பாடசாலைகளிலும் அதன் நிர்வாகிகள், ஆசிரியர்களின் முயற்சியின் பலனாக பெரும்பாலும் தமிழ் மொழியில் பேச, எழுத, வாசிக்கத் தெரிந்தவர்களாகவே காணப்படுகின்றார்கள்.

ஓர் இனத்தின் அடையாளத்தையும் ஒருமைப்பாட்டையும் அழிக்க வேண்டுமெனில் அவர்களுடைய மொழியை அழிப்பதுதான் ஒரே வழி என்பது பல இனவாத நாடுகளின் அரசுகளுடைய கொள்கையாக இருந்து வருகின்றது.

(தொடரும்)

# அங்கொட லொக்கா உயிரிழந்தாரா?

# தீவிர விசாரணைகள் ஆரம்பம்

## மரபணு பரிசோதனைக்குரிய மாதிரிகள் அனுப்பி வைப்பு

(கொழும்பு)

இலங்கையில் பல்வேறு குற்றங்களுக்காக தேடப்பட்டு வந்த பாதாள உலகத் தலைவனான 'அங்கொட லொக்கா' உயிரிழந்துள்ளாரா? என்பதை உறுதிப்படுத்துவதற்கான மரபணு பரிசோதனைக்கு தேவையான மாதிரி மற்றும் கைவிரல் அடையாளங்கள் இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சு மற்றும் இந்தியத் தூதரகம் ஊடாக இவை குறித்த விவகாரம் தொடர்பில் தற்போது விசாரணைகளை முன்னெடுக்கும் சி.பி.ஐ. எனப்படும் இந்திய மத்திய குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின் போதே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன இதனைத் தெரிவித்தார்.

கொலை, கொள்ளை, கப்பம் கோரல் உள்ளிட்ட பல திட்டமிட்ட குற்றங்கள் தொடர்பில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த, பிரபல பாதாள உலகத் தலைவன் அங்கொட லொக்கா என அறியப்படும் மத்துமகே லசந்த சமிந்த பெரேராவின் மரணம் தொடர்பில் 27 வயதான அமானி தான்ஜி, 36 வயதான சட்டத்தரணி சிவகாமி சுந்தரி மற்றும் எஸ்.தியாகேஸ்வரன் ஆகிய மூவர் சந்தேகத்தில் இந்திய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அங்கொட லொக்கா நஞ்சூட்டி கொலைச் செய்யப்பட்டு அவரது உடல் எரிக்கப்பட்டு விட்டதாக இலங்கை ஊடகங்கள் வெளியிட்ட தகவலை அடுத்து, இலங்கை பொலிஸார் 2002 ஆம் ஆண்டில் 25 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைகள் தொடர்பில் பரஸ்பர தகவல் பரிமாற்றுச் சட்டத்தின் கீழ் இந்தியாவின் உதவியை அது குறித்து உறுதி செய்ய கோரியிருந்தது.

இந்நிலையிலேயே இது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்த இந்திய பொலிஸார் அங்கொட லொக்கா என கருதப்படும் நபரின் உடலை எரிக்க, அவர் தொடர்பில் போலி ஆவணங்களைத் தயாரித்த குற்றச்சாட்டில் தியாகேஸ்வரனையும் சிவகாமி சுந்தரி என்ற சட்டத்தரணியையும் கைது செய்தனர். 27 வயதான அமானி தான்ஜி என்ற பெண் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு சென்று கோயம்புத்தூர் - சேரன் மாநகரில் அங்கொட லொக்காவுடன் வசித்து வந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்த நிலையில் அவரையும் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

அங்கொட லொக்கா, இந்தியாவில் கொலை செய்யப்பட்ட பின்னர் அல்லது மரணமடைந்த பின்னர் அவரது உடல் மதுரையில் எரிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட விடயம் தொடர்பில் தற்போது இந்திய மத்திய குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இவ்வாறான நிலையில் இந்த விசாரணை சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டது. சி.பி.ஐ. எனப்படும் இந்திய மத்திய குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் 7 குழுக்கள் இது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் இது தொடர்பில் இரு வழக்குகளை கோவை குற்றவியல் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள அவர்கள், இவ் விவகாரத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இரு பெண்கள் உள்ளிட்ட மூவரை தமது பொறுப்பில் எடுத்து தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி கோரியுள்ளதாகவும் அறிய முடிகின்றது. அது தொடர்பில் கோவை குற்றவியல் நீதிமன்றின் முடிவு இன்று புதன்கிழமை அறிவிக்கப்படவுள்ளது.

மரணம் தொடர்பாக ஒரு வழக்கும் போலி ஆவணங்களைப் பயன்படுத்தி தங்கியிருந்ததாக மற்றொரு வழக்கும் கோவை குற்றவியல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

கடந்த ஜூலை மாதம் 3 ஆம் திகதி பிரதீப் சிங் என அடையாளத்தைக் கொண்டிருந்த அங்கொட லொக்கா, நெஞ்சுவலி காரணமாக கோயம்புத்தூரில் வைத்தியசாலையொன்றில் அமானி தான்ஜி என்ற குறித்த பெண்ணால் அனுமதிக்கப்பட்டிருந்தார். மயக்க நிலையில் இருந்த லொக்கா உயிரிழந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. எனினும் இலங்கையின் ஊடகங்கள் அவர் விஷம் கொடுக்கப்பட்டு, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக செய்தி வெளியிட்டிருந்தன.



இந்நிலையிலேயே , கைது செய்யப்பட்டுள்ள மூவரையும் 7 நாட்களுக்கு தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்வதற்கான அனுமதியை வழங்குமாறு இந்திய மத்திய குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கோரப்பட்டுள்ளது.

உண்மையில் அங்கொட லொக்கா உயிரிழந்துவிட்டாரா? அல்லது உயிரிழந்துவிட்டதாகக் கூறி நாடகமாடுகின்றனரா? என்பதை உறுதி செய்ய விசாரணைகளை சி.பி.ஐ. ஆரம்பித்துள்ளது. அந்த விசாரணைகளுக்காகவே, தற்போது அங்கொட லொக்காவின் கைவிரல் ரேகை, டி.என்.ஏ. மாதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அங்கொட லொக்கா, இறந்த பின்னர் எரிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் போதும், கடந்த ஜூலை மாதம் 3 ஆம் திகதி பிரதீப் சிங் என்ற அடையாளத்துடன் அவர் உயிரிழந்திருந்ததாக வெளிப்படுத்தப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைய மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன.

பொலிஸ் தலைமையகத்தின் உயர் அதிகாரி ஒருவரின் தகவலின் பிரகாரம்,

இலங்கையிலிருந்து அனுப்பப்பட்டுள்ள அறிவியல் கூறு மாதிரிகள், அங்கொட லொக்கா என கருதப்படுபவரின் சடலம் தகனம் செய்யப்பட முன்னர் பெறப்பட்ட உடல் மாதிரியில் உள்ள டி.என்.ஏ.கூறுகளுடன் ஒத்திசைகின்றதா? என ஆராயப்படவுள்ளது என சுட்டிக்காட்டினார்.

இந்தியாவின் எப்.பி.ஐ. விசாரணைகளின் பிரகாரம், இறந்தது அங்கொட லொக்கா என அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்பட்டால், அது குறித்த சட்ட பூர்வ நடவடிக்கைகள் இலங்கையில் முன்னெடுக்கப்படும் என அந்த அதிகாரி சுட்டிக் காட்டினார். (2)

## மைத்திரிக்கும் அமைச்சுப்பதவி?



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மகிந்த அமரவீர மற்றும் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோருக்கும் புதிய அமைச்சரவையில் அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி மைத்திரிபால சிறிசேன இரண்டு அமைச்சுப் பதவிகளுக்கு பரிசீலிக்கப்படுவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களின் தகவல்கள் மேற்கோள் காட்டி செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், புதிய அரசாங்கத்தின் அமைச்சர்களின் எண்ணிக்கை, துறைகள், ஒதுக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் சம்பந்தமான வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## மோ.சைக்கிள்-கார் மோதல் தாய்,மகள் பரிதாபமாகப் பலி

(மல்வானை)

தொம்பே-சமனபெத்த பிரதான வீதியின் மல்வானை பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, நேற்று முன்தினம் மல்வானை பகுதியிலிருந்து வந்த கார் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து எதிரில் வந்த மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதுண்டமையினால் இவ் விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 42 வயதுடைய தாயும் 19 வயதுடைய அவரின் மகளும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

இச் சம்பவத்துடன் தொடர்புடைய கார்ச்சாரதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு உயிரிழந்தவர்களின் சடலங்கள் உடற் கூற்றுப் பரிசோதனைகளுக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இவ் விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2)

## சுற்றிவளைப்பில் 112 பேர் கைது

(கொழும்பு)

கொழும்பு பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புக்களில் போதைப் பொருட்களை உடைமையில் வைத்திருந்தமை மற்றும் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டமை தொடர்பில் 112 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 51 பேர் போதைப்பொருட்களை உடைமையில் வைத்திருந்தமை தொடர்பிலும் பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த 61 நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஜ-4)

# இரகசிய முறைப்பாட்டு தொலைபேசி இலக்கங்கள் ஆரம்பித்து இரு வாரத்தினுள் 1800 முறைப்பாடுகள்

(கொழும்பு)

**குற்றச் செயல்கள் உள்ளிட்ட இரகசிய தகவல்களை வழுங்குவதற்காக பொலிஸ் திணைக்களம் அறிமுகம் செய்த 1997, 1917 ஆகிய துரித தொலைபேசி இலக்கங்களுக்கு இதுவரை (அறிமுகம் செய்யப்பட்டு இரு வாரங்களுக்குள்) 1805 அழைப்புக்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.**

கப்பம் பெறல், போதைப் பொருள் கடத்தல், பாரிய ஊழல் மற்றும் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடிய இரகசியத் தகவல்களை வழங்குவதற்கு அறிமுகம் செய்யப்பட்ட 1997 என்ற துரித தொலைபேசி இலக்கத்துக்கு 1527 அழைப்புக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

குற்றச் செயல்களில் ஈடுபடுவோர், போதைப்பொருள் கடத்தலால் திரட்டப்படும் சொத்துக்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் தகவல் வழங்க அறிமுகம் செய்யப்பட்ட 1917 என்ற துரித இலக்கத்துக்கு 278 அழைப்புக்களும் கிடைக்கப் பெற்றுள்ளன.

கப்பம் பெறல், போதைப் பொருள் கடத்தல், பாரிய ஊழல் மற்றும் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல், பொதுமக்கள் அமைதிக்கு குந்தகம் ஏற்படுத்தும் தகவல்கள் போன்ற விசேட காரணிகளை தெரிவிக்க அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 1997 என்ற துரித தொலைபேசி இலக்கம் பிரத்தியேக தனியான பொலிஸ் குழுவால் கையாளப்பட்டு வருகின்றது. இது பொலிஸ் உளவுப் பிரிவான பொலிஸ் விசேட நடவடிக்கை பிரிவில் மிக இரகசியமாக இயங்கும் குழுவொன்றினால் கையாளப்பட்டு வரும் நிலையில்,

அவ்விலக்கத்துக்கு 1527 அழைப்புக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

முதல் வாரத்தில் 956 அழைப்புக்களும் இரண்டாம் வாரத்தில் 571 அழைப்புக்களும் கிடைக்கப் பெற்றுள்ளன. இவ்வாறு கிடைக்கப் பெற்ற அழைப்புக்களில் கிடைத்த தகவல்களில் 66 தகவல்கள் வெற்றிகரமான சுற்றிவளைப்புக்களுக்கு உதவியுள்ளதுடன் அதில் 14 சுற்றிவளைப்புக்கள் மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யுமளவுக்கு பாரிய சுற்றிவளைப்புக்களாக அமைந்துள்ளன.

இந்நிலையில் குற்றச் செயல்களில் ஈடுபடுவோர், போதைப்பொருள் கடத்தலால் திரட்டப்படும் சொத்துக்கள் உள்ளிட்ட கறுப்புப் பண சுத்திகரிப்பு சட்டத்தின் கீழ் விசாரணை செய்ய முடியுமான சொத்துக் குவிப்புக்கள் தொடர்பிலான விடயங்கள் குறித்து 1917 என்ற துரித தொலைபேசி இலக்கத்தின் ஊடாக அறிவிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அவ்விலக்கத்துக்கு கடந்த இரு வாரங்களில் 278 அழைப்புக்கள் கிழைக்கப் பெற்றுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன சுட்டிக்காட்டினார்.

அந்த இலக்கமானது அண்மையில் சி.ஐ.டி. பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட சொத்துக் குவிப்பு விடயங்கள் தொடர்பில் விசாரிக்கும் விசேட பிரிவின் கட்டுப்பாட்டில் செயற்படுத்தப்படும் நிலையில், அவ்வாறு கிடைக்கப் பெற்ற அழைப்புக்களில் கிடைத்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 38 சம்பவங்கள் தொடர்பில் குறித்த விசேட பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

ஏனைய 240 அழைப்புக்கள் ஊடாக கொடுக்கப்பட்ட தகவல்களும், சி.ஐ.டியின் குறித்த விடயப் பரப்புக்குள் உள்ளடங்காத நிலையில் அவை, பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு மற்றும் ஏனைய பொலிஸ் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

கடந்த ஜூலை 27 ஆம் திகதி பொலிஸாரால் இவ்விரு இலக்கங்களும் அறிமுகப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2083

**வைதேகி**

மகன்-அப்பா இந்த சங்கு சக்கரம் பத்திக்கவே மாட்டேங்குது



அப்பா- டேய் மெதுவாக பேசுடா... அது சங்கு சக்கரம் இல்லை... உங்க அம்மா செஞ்ச முறுக்கு...

**சரண்**

என்னடி இது, பிரியாணில டூத் பேஸ்ட் வாடை அடிக்குது..?



லவங்கம்,புதினா,உப்பு மூனுமே காலி ஆகிடுச்சுங்க,அது தான்கொஞ்சம் பேஸ்ட் போட்டேன்.அதிலே மூன்றும் இருக்காமே.

**கதிர்**

டாக்டர்: காலையிலே என்னமா சாப்பிட்டாய்?
பெண்: பர்க்கர்,பீசா,சான்ட்வெஜ் சாப்பிட்டேன்



டாக்டர்: இங்க பாருமா இது வாட்சப்போ, பேஸ்புக்கோ இல்லை வைத்தியசாலை உண்மையை சொல்லு!
பெண்: பழைய சோறும் கருவாட்டு குழம்பும் சேர்...

**யுதேஷ்**


பக்கவிளைவுகள் இல்லாத ஒரே மருந்து சிரிப்பு மட்டுமே



உலகத்தில் மிகவும் அழகான விடயம். அதனால் எப்பவுமே மகிழ்ச்சியோடு இருங்க...

**தனுப்பிரியா**

அண்ணே, நூல் எழுதுறவங்களை நூலாசிரியர் என்று சொல்றாங்க. கதை எழுதுறவங்களை கதையாசிரியர் என்று சொல்றாங்க...



இந்த பேர் எழுதுறவங்களை பேராசிரியர் என்று சொல்வாங்களா?

**வைஸ்ணவி**


மதிப்பும்,மரியாதையும் கிடைக்காத இடத்தில்



கௌரவமான தலைகுனிவு செல்போன்...!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# முட்டை விலை அதிகரிப்பு



(கொழும்பு)

சந்தையில் முட்டையின் விலை தொடர்ந்து அதிகரித்துச் செல்கிறது. அதற்கமைய சந்தையில் முட்டையொன்றின் விலை 22 ரூபாயாக அதிகரித்துள்ளதாக பேக்கரி உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக தாம் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருவதாக அகில இலங்கை பேக்கரிகள் உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் என்.கே.ஜயவர்தன குறிப்பிட்டுள்ளார்.

பேக்கரி உற்பத்திக்காக அதிளவான முட்டைகள் பயன்படுத்தப்படுவதன் காரணமாக சந்தையில் முட்டைக்கான நிர்ணய விலையொன்றை அறிவிக்க வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ஜ-4)

# தனிமைப்படுத்தலிலிருந்து 118 பேர் வீடு திரும்பினர்

(கொழும்பு)

கட்டாய தனிமைப்படுத்தல் நடவடிக்கையை நிறைவு செய்த மேலும் 118 நபர்கள் நேற்று தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவுசெய்து, அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி கல்கந்தை தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து 112 பேரும், மீயாங்குளம் தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து நால்வரும், புனானை தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து இருவரும் இவ்வாறு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

தற்போது முத்தரப்பு படைகளினால் பராமரிக்கப்பட்டு வரும் 39 தனிமைப்படுத்தல் நிலையங்களில் 3,449 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது. (ஜ-4)



# ஆன்மீகம்

## கொழுந்துவிட்டு எரியட்டும் ஆர்வத் தீ!



எச்செயலில் நீங்கள் ஈடுபட்டாலும் கொழுந்து விட்டெரியும் ஆவலுடன் அப்பணியில் செயற்படுங்கள். அதுவே உங்கள் இயல்பாக அமையப் பழகிக் கொள்ளுங்கள்'' என்றார் ஒரு பேரறிஞர். அணையாத ஆர்வம் என்னும் தணியாத தாகம் நம் இயற்கையான குணமாக அடைந்துவிட்டால் நாம் பூரண வெற்றி அடையலாம். 'வெற்றி மீது வெற்றி வந்து என்னைச் சேரும் - அதை வாங்கித் தந்த பெருமை எல்லாம் என்னைச் சேரும்!' என்று அந்த அற்புதமான குணத்தை வாழ்த்தி அன்றாடம் நாம் பாடலாம். விழுந்து விட்டாலும் நம்மை எழுந்து போராடச் செய்யும் இனிய குணமே கொழுந்து விட்டெரியும் ஆவல் என்று குறிப்பிடலாம். அடிமை இந்தியாவில் 1882இல் தோன்றி சுதந்திரம் பெறுவதற்கு முன்னாலேயே 1921இல் மறைந்துவிட்டார் மகாகவி பாரதியார்.

ஆனால், நம்நாடு சுதந்திரம் அடைந்தே தீரும் என்கிற விடுதலை வேட்கை அவரிடம் வீறுகொண்டு எழுந்ததால் தான் 26 வருடங்களுக்கு முன்பே அவரால் கீழ்க்கண்ட வண்ணம் கீதம் இசைக்க முடிந்தது. 'ஆடுவோமே! பள்ளு பாடுவோமே! ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்' பெர்னாட்ஷா சொல்கிறார்: "அப்போது நான் இளைஞனாக இருந்தேன். என் செயல்கள் எல்லாம் வெற்றி பெற வேண்டும் என்று பேரார்வத்துடன் முனைந்து காரியங்கள் செய்தேன். ஆனால், பத்து பணிகளில் ஈடுபட்டால் ஒன்பது காரியங்களில் தோல்வி அடைவதைக் கண்டேன். என் செயல்கள் தோல்வி அடைவதை நான் சற்றும் விரும்பவில்லை. ஒன்பது முறை வெற்றி பெறுவதற்கு என்ன வழி என்று சிந்தித்தேன். ஒரு உண்மை பளிச்சென்று தெரிந்தது.

தொண்ணூறு முறை முயன்றால் ஒன்பது முறை வெற்றி கிடைக்கும் என்பதுதான் அது. ஆகவே வெற்றி அடைவதற்கு வழி முயற்சிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்திக் கொள்வதுதான் என்பதைக் கண்டு கொண்டேன்." உலகம் என்னுடையது என்று உற்சாகமாக இளைஞர்களைப் பார்த்து உரக்கக் குரல் எழுப்புகிறார் பாரதிதாசன்.

'மனிதரில் நீயுமோர் மனிதன், மண்ணன்று!

இமை திற! எழுந்து நன்றாய் எண்ணுவாய்!

தோளை உயர்த்து! சுடர்முகம் தூக்கு!

மீசையை முறுக்கு மேலே ஏற்று!

விழித்த விழியில் மேதினிக்கு ஒளி செய்!

நகைப்பை முழக்கு! நடத்து லோகத்தை!

உலகளவில் அதிக மக்கள் தொகையைக் கொண்டது சீனதேசம் என்றாலும் அதிக இளைஞர்களைக் கொண்டது நம் அன்னை பாரதம்தான். இளைஞர்களின் ஆர்வம் நெறிமுறைப் படுத்தப்பட்டால் எடுத்த காரியம் எல்லாம் வெற்றியாகவே முடியும். "என்னிடம் நூறு இளைஞர்களைத் தாருங்கள். புதிய இந்தியாவை என்னால் புனரமைத்துத் தரமுடியும்," என்றார் வீரத் துறவி விவேகானந்தர். நூறு இளைஞர்கள் என்ன, பல்லாயிரம் பாரத இளைஞர்கள் தற்போது உள்ளார்கள். வழி நடத்தத்தான் ஒரு விவேகானந்தன் இல்லை என்று வருத்தப்படுகிறார் புதுக்கவிஞர் ஒருவர். 'தனி ஒரு விவேகானந்தர் இனி ஒரு முறை ஏன்? அனைவருமே விவேகானந்தர்களாக ஆவோம்' என்கிறார் இன்னொரு கவிஞர். நம் ஒவ்வொருவருக்குள்ளும் பொதிந்திருக்கும் திறமைகளைத் தெரிந்து கொண்டு ஊதி ஊதி அந்த உன்னதக் கலைகளை நாளும் நாளும் நாம் வளர்க்க வேண்டும். (தொடரும்)

# செய்தித்துளிகள்

## வாசனைத் திரவிய ஏற்றுமதியை அதிகரிக்க விசேட வேலைத்திட்டம்

(கொழும்பு)

நாட்டின் வாசனைத் திரவிய ஏற்றுமதியை அதிகரிப்பதற்குத் தேவையான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான நிதித் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் மக்கள் வங்கி வாசனைத் திரவிய உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தக சங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளன.

தன்னிறைவான நாட்டை உருவாக்கும் அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில், மக்கள் வங்கி கடன் திட்டத்தையும் தற்போது அறிமுகப் படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் விவசாயம், கடற்றொழில், பண்ணை வளர்ப்பு, சிறு நெல் ஆலைகள், பால் உற்பத்திப் பொருட்கள் உட்பட பல துறைகள் இதன் மூலம் பயன்களை பெற்றுக் கொள்ள முடியும். (ஜ-4)

## கைதிகளைப் பார்வையிடலாம்

(கொழும்பு)

எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் கைதிகளை பார்வையிடுவதற்கு பார்வையாளர்களை அனுமதிக்க சிறைச்சாலை திணைக்களம் முடிவு செய்துள்ளது.

அதன்படி கடுமையான சுகாதார வழிகாட்டல்கள் மற்றும் நிபந்தனைகளின் கீழ், கைதிகளின் நெருங்கிய உறவினர்களுக்கு மாத்திரமே கைதிகளை பார்வையிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஒரு கைதியை பார்வையிடுவதற்கு வாரத்திற்கு ஒருமுறை மட்டுமே உறவினர் அனுமதிக்கப்படுவர்.

உறவினர்கள் கைதிகளுக்கு உணவு மற்றும் பானங்களை வழங்க முடியாது. அதேநேரத்தில் சுகாதாரப் பொருட்களை மட்டுமே வழங்க முடியும். (ஜ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 140 | 120 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 130 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 160 | 180 | 220 | 200 |
| தக்காளி | 80 | 70 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 80 |
| கோவா | 160 | 130 | 130 | 140 |
| கரட் | 120 | 150 | 150 | 200 |
| பூசணி | 80 | 60 | 80 | 120 |
| புடோல் | 60 | 80 | 60 | 80 |
| வாழைக்காய் | 120 | 120 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 100 | 50-150 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 110 | 100 | 120 |
| பாகற்காய் | 160 | 150 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 160 | 160 | 100 | 160 |
| பயற்றங்காய் | 80 | 80 | 60 | 120 |
| லீக்ஸ் | 100 | 90 | 100 | 120 |
| பீற்றூட் | 120 | 80 | 100 | 120 |
| கறிமிளகாய் | 360 | 300 | 260 | 300 |
| முருங்கைக்காய் | 140 | 120 | 120 | 120 |
| போஞ்சி | 200 | 260 | 280 | 280 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | -- | 120 |
| கீரை - 1 பிடி | 40 | 40 | 30 | 40 |
| தேசிக்காய் | 150 | 120 | 140 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 55 | 40-70 | 60-80 |
| இராசவள்ளி | -- | -- | 300 | -- |
| வெங்காயப்பூ | 250 | 220 | 200 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 40 | -- | 30 | 60 |




## பீர்பாலின் புத்திசாலித்தனம்

பீர்பாலின் அறிவாற்றலையும் புத்திக்கூர்மையும் கேள்விப்பட்ட காபூல் அரசருக்கு, பீர்பாலின் அறிவை ஆராய்ந்து அறிய ஆவல் ஏற்பட்டது.

அதனால் காபூல் அரசர் ஒரு கடிதம் எழுதினார். அதில் மேன்மை தங்கிய அக்பர் சக்கரவர்த்தி அவர்களுக்கு, ஆண்டவன் தங்களுக்கு நலன்கள் பலவும், வெற்றிகள் பலவும் தருவாராக.

தாங்கள் எனக்கு ஒரு குடம் அதிசயம் அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று எழுதி கையெழுத்துப் போட்டு, தூதன் மூலமாக அக்பருக்கு அனுப்பினார் காபூல் அரசர்.

கடிதத்தைப் படித்த அக்பர் திகைத்து, ஒரு குடம் அதிசயம் அனுப்புவதா? ஒன்றுமே புரியவில்லையே என்று குழம்பி, பீர்பாலிடம் கடிதத்தை காட்டினார்.

பீர்பால் சிறிது நேரம் யோசித்தார். அப்புறம், அக்பரிடம் மூன்று மாதத்தில் அதிசயம் அனுப்புவதாக பதில் எழுதி அனுப்புங்கள் என்றார். அக்பரும் அதேபோல் தபால் எழுதி அனுப்பினார்.

பிறகு அக்பர், பீர்பாலிடம், ஒரு குடம் அதிசயம் எப்படி அனுப்புவீர்? என்று கேட்டார். அதற்கு பீர்பால், மூன்று மாதம் கழித்து அந்த அதிசயத் தைப் பாருங்கள் மன்னா என்றார்.

பிறகு பீர்பால் ஒரு மண் குடத்தை எடுத்து ஒரு பூசணிக் கொடியில் காய்த்திருந்த பூசணிப் பிஞ்சு ஒன்றைக் கொடியுடன் மண் குடத்திற்குள் வைத்து வைக்கோலால் குடத்தை மூடினார்.

சிறிது நாட்களான பிறகு பூசணிப் பிஞ்சு குடம் நிறையுமளவிற்கு குடத்திற்குள்ளேயே நன்றாக வளர்ந்து பெருத்திருந்தது.

குடத்திற்குள் இருக்கும் பூசணிக் காயை மட்டும் வைத்துக் கொண்டு மற்றதை நீக்கி விட்டார் பீர்பால்.

பிறகு அந்தக் குடத்தை அக்பரிடம் காட்டினார் பீர்பால். அக்பருக்கு ஆச்சரியம். குடத்தின் வாய்ப்பகுதி உள்ளே இருக்கும் பூசணிக்காயைவிட மிகவும் சிறியது. இதனுள் இவ்வளவு பெரிய பூசணிக்காயை எப்படி நுழைத்தீர்கள் என்று கேட்டார்.



பீரபால் அதைப் பற்றி மன்னருக்கு விளக்கிக் கூறினார். அந்தப் பூசணிக்காய் குடத்தை அப்படியே காபூல் அரசருக்கு, அதிசயம் என்று அனுப்பி வைக்குமாறு கூறினார்.

குடத்திற்குள் இருக்கும் பூசணிக்காயைப் பார்த்த காபூல் அரசர், பீர்பாலின் புத்திக்கூர்மையை எண்ணி வியப்பில் ஆழ்ந்தார்.

**நீதி: புத்திசாலியாக இருந்தால் முடியாது என்பதுகூட முடியும்.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல்

34


கொல்லம்

மகேந்திர வர்மனுக்குத் தான் தனக்குத்தானே விருதுப் பெயர்களை வைத்துக் கொள்ளும் பழக்கம் ஏற்பட்டு (அவருடைய விருதுப் பெயர்கள் தமிழ், தெலுங்கு, வடமொழிகளில் இருந்தன) அதைக் கல்வெட்டிலும் பொறித்து வைத்துக் கொண்டார். (இடுகளி, சித்திரகாரப்புலி, விலேயாள்). இதன் நீட்சி தான் மெய்கீர்த்தி.

ராஜராஜன், கேரள வெற்றியைத் தன் பெரும்பாலான கல்வெட்டுக்களில் பொறித்துள்ளார். 'சாலை கலம் அறுத்து அருளிய கோ ராஜராஜகேசரி வர்மரான ஸ்ரீ ராஜராஜதேவன் என்கிற மெய்கீர்த்தி காந்தளூர்ச் சாலைபோர் குறித்து பொறிக்கப்பட்டுள்ளது.

காந்தளூர்ச்சாலை வெற்றி உட்பட ராஜராஜனின் பல போர் வெற்றிகளை இது போன்ற மெய்கீர்த்திகள் வழியாகவே நாம் அறிந்து கொள்கின்றோம்.

'முதல் சத்துணவுத் திட்டத் தைத் தொடங்கி வைத்தவரே, இலவசத் தொட்டிலின் அன்னையே, உழவர் சந்தையின் பிதாமகனே, சேது சமுத்திர நாயகரே' போன்ற சுவரொட்டிகள் எல்லாம் அடிப்படை இந்த மெய் கீர்த்திதான்.

காந்தளூர்ச்சாலை வெற்றிக்குப் பிறகு, ராஜராஜன் தன் படையைக் கொல்லம் பக்கம் திருப்பி விட்டார். காந்தளூர், விழிஞம் ஆகிய கேரளப் பகுதிகளையடுத்து கொல்லத்தையும் வளைத்தார்.

கொல்லம், கொல்ல நாடு, கொடுங்கோளூர் ஆகிய பகுதிகளை ராஜேந்திரனின் தலைமையில் வளைத்தது சோழர் படை. இந்தப் பகுதிகளைச் சிற்றரசர்கள் ஆண்டு வந்ததால் கடும் முயற்சி எதுவுமின்றி சோழர் படையால் நினைத்த இடங்களை வெல்ல முடிந்தது.

கீழ்ப்பழுவூரை ஆண்ட பழு வேட்டரையர் கந்தன் மறவன், பாண அரசன் மறவர் நரசிம்மன், இலாடராயர், சளுக்கிவீமன், வேளான் சுந்தரசோழன் என்பன போன்ற பல சிற்றரசர்கள் சோழர்களின் உற்ற நண்பர்களாக இருந்தார்கள்.

இவர்கள் சோழப் பேர்ரசின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டு திறை செலுத்தி வந்தார்கள்.

போர்களின் வெற்றிகள் அதிகரிக்க அதிகரிக்க, ராஜராஜனின் விருதுப் பெயர்கள் கூடிக்கொண்டே போயின. இறுதியில், நாற்பது விருதுப் பெயர்களுக்கு சொந்தமானார் ராஜராஜன்.

ஒரு சுவாரஸ்யத்துக்காக அத்தனை யெர்களையும் ஒருமுறை படித்துப் பாருங்கள். அழகியசோழன், மும்முடிச் சோழன், காந்தளூர் கொண்டான், சோழ நாராயணன், அபய குல சேகரன், அரிதுர்க்கலங்கன், அருள்மொழி, ரணமுகபீமன், ரவிவம்ச சிகாமணி, ராஜ பாண்டியன், ராஜசர்வக்ஞன், ராஜராஜன், ராஜகேசரி வர்மன், சோழேந்திர சிம்மன், ராஜமார்த்தாண்டன், ராஜேந்திர சிம்மன், ராஜவிநோதன், உத்தம சோழன், உத்துங்கன், உய்யகொண்டான், உலகளந்தான், கேரளாந்தகன், சண்ட பராக்கிரமன், சத்ரு புஜங்கன், சிங்கனாந்தகன், சிவபாதசேகரன், சோழகுல சுந்தரன், சோழ மார்த்தாண்டன், திருமுறை கண்ட சோழன், தெலிங்க குலகாலன், நித்யவிநோதன், பண்டித சோழன், பாண்டிய குலாசனி, பெரிய பெருமாள், மூர்த்தி விக்கிரமாபரணன், ஜனநாதன், ஜெயகொண்ட சோழன், சத்திரிய சிகாமணி, கீர்த்தி பராக்கிரமன், தைலகுல காலன்.

(தொடரும்)

நேர்மையாக இருப்பதுபோல பாசாங்கு செய்யாதே. தன்னை செம்மைப்படுத்திக் கொண்டு நேர்மையை வளர்த்துக் கொள்வதே சிறந்தது. - ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வாக்களிப்பதுடன் எங்கள் கடமை முடிந்து விடுகிறதா?

பொதுத் தேர்தல் நடந்து முடிந்து விட்டது. பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு அடுத்து வரும் ஐந்து வருடங்கள் வெள்ளி திசை.

வாக்களித்து அவர்களுக்கு வெள்ளி திசை கொடுத்த மக்களுக்கு என்ன திசை என்று எவரும் கணித்துப் பார்ப்பதில்லை.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வெள்ளி திசை என்றால், வெள்ளி திசை தருகின்ற யோகங்களை மக்கள் அனுபவிக்க வேண்டும்.

அதுவே உண்மையான வெள்ளி திசையாகும்.

இதைவிடுத்து மக்கள் பிரதிநிதிகளுக்கு மட்டுமே வெள்ளி திசை. மக்களுக்கு சனி திசை என்றால் அது யாருடைய தவறு என்பதைச் சிந்தித்துப் பார்ப்பது அவசியம்.

அண்மையில் நடந்த பொதுத் தேர்தலின் போது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்றுக் கொள்வதற்காக, வேட்பாளர்கள் செலவிட்ட தொகையை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள்.

பணச் செலவு மட்டுமல்ல. தேர்தலுக்காகப் பயன்படுத்தப்பட்ட மனித உழைப்பு சொல்லி மாளா.

இவ்வாறாக பணமும் மனித உழைப்பும் பெருமளவில் செலவிடப்பட்டு தேர்தல் எதிர்கொள்ளப்பட்டது என்பதற்குள், ஜனநாயகப் பற்றோ அல்லது மக்களுக்கு சேவை வழங்குவது என்ற மனநிலையோ இருக்கிறதா? என்றெல்லாம் நாம் பார்த்தாக வேண்டும்.

உண்மையில் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களை இனி மக்கள் சந்திப்பதென்பதே கடினமான காரியமாக இருக்கும்.

தேர்தல் காலத்துக்குப் பின்னர் அவர்கள் மக்களைத் தேடி வரப் போவதில்லை. இதுவே யதார்த்தம். இந்த யதார்த்தத்துக்கு நாங்கள் புறம்பானவர்கள் என்று யாரேனும் மார்தட்டுவார்களாயின் நல்லது. களத்தில் நின்று மக்கள் பணி செய்து காட்டுங்கள்.

நீங்கள் செய்கின்ற பணி ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களையும் திசை திருப்பும்.

தவிர, பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை என்பதாக நிலைமை இருந்தால் காவேரிதான் சிங்காரி. சிங்காரிதான் காவேரி என்பதைத் தவிர வேறு எதுவுமில்லை எனலாம்.

எதுவாயினும் தாம் வாக்களித்து பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்த பிரதிநிதிகள் எவ்வாறாகச் செயலாற்றுகிறார்கள் என்பதைக் கண்காணிக்கின்ற கடமையை பொது மக்கள் ஒவ்வொருவரும் தவறாமல் செய்தாக வேண்டும்.

அதேவேளை மக்கள் பிரதிநிதிகள் நல்லது செய்யும்போது அதனைப் பாராட்டவும் தவறிழைக்கும்போது சுட்டிக் காட்டவும் பொதுமக்கள் தயாராக இருந்தால், பாராளுமன்ற உறுப்பினர்கள் நிச்சயம் மக்கள் பணி செய்வதில் இருந்து தங்களை விலக்கி வைக்க முடியாமல் போகும்.

# அடுத்த தேர்தலுக்கு முன்னர் ஐ.தே.கட்சியை மறுசீரமைக்க வேண்டும்

## கட்சி உறுப்பினர்களிடம் ரணில்

(கொழும்பு)
அடுத்த தேர்தலை வெற்றிகரமாக எதிர் கொள்ளும் பொருட்டு கட்சியை முழுமையாக மறுசீரமைக்க வேண்டியதன் அவசியத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கட்சியின் உறுப்பினர்களுக்கு தெளிவு படுத்தியுள்ளார்.

2020 பொதுத் தேர்தல் மற்றும் தேர்தல் தொடர்பான பிற விடயங்கள் குறித்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் மூத்த உறுப்பினர்களுடன் அவர் நேற்று முன்தினம் கலந்துரையாடியுள்ளார்.

அந்தவகையில் கட்சி உறுப்பினர்களுக்கு அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடவும், கட்சியை முன்னோக்கி நகர்த்த ஒரு புதிய தலைமைக் குழுவை அடையாளம் காணவும் ரணில் விக்கிரமசிங்க கேட்டுக் கொண்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் அடுத்த செயற்குழு கூட்டத்தில் தங்கள் முடிவை சமர்ப்பிக்குமாறும் ரணில் விக்கிரமசிங்க கேட்டுக்கொண்டுள்ளார். (ம-3)

# ஐக்கிய தேசியக் கட்சியின் இடைக்கால தலைவராக

## கரு ஜெயசூரிய நியமனம்

(கொழும்பு)
முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய ஐக்கிய தேசியக் கட்சியின் இடைக்காலத் தலைவராக இருப்பதற்கு நிபந்தனைகளுடன் ஒப்புக்கொண்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு புதிய தலைவர் ஒருவரை நியமிக்கும் வரை ரணில் விக்கிரமசிங்கவே குறித்த பதவியில் இருப்பாரென அறிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது தெளிவான தலைமை கிடைத்த பின்னர் பதவியில் இருந்து விலகுவதாக கூறியுள்ள ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையிலான இடைக்கால தலைமைக் குழுவை நியமிக்க முன்மொழிந்தார்.

அதற்கு கரு ஜெயசூரியவும் நிபந்தனைகளுடன் ஒப்புக்கொண்டுள்ளதாக அக்கட்சி தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-3)

# அம்பகாமம் - தச்சடம்பன் - ஆனையிறவு - முகமாலை பகுதிகளில் 23 ஆயிரத்து 583 வெடிபொருட்கள் மீட்பு

(கண்டாவளை)
முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும், கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் முகமாலை மற்றும் ஆனையிறவுப் பகுதியிலும் 12 இலட்சத்து 86 ஆயிரத்து 333 சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து 23 ஆயிரத்து 583 அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனாவ தெரிவித்தார்.

ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் கண்ணிவெடியகற்றும் அரச சார்பற்ற நிறுவனமான ஸார்ப் கடந்த 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 2020 ஒகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழுள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலை மற்றும் ஆனையிறவிலும் 12 இலட்சத்து 86 ஆயிரத்து 333 சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து 23 ஆயிரத்து 583 அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

தொடர்ந்து இந்நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலை மற்றும் ஆனையிறவு பகுதியில் துரிதகதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(4-5-315)

# தொழிற்கல்வித் துறைக்கான மாணவர் அனுமதி - 2020

(கிளிநொச்சி)
கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி அமைச்சினால் 13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் தொழிற்கல்வித் துறைக்கான மாணவர் அனுமதிவழங்கப்படுகிறது.

க.பொ.த சாதாரண தரம் 2018 அல்லது 2019 இல் பரீட்சைக்கு தோற்றியோர் இதற்காக விண்ணப்பிக்க முடியும் என்றும் விண்ணப்பங்களை கல்விஅமைச்சின்இணையத்தளத்தில் அல்லது பாடசாலையில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை நாளை மறுதினம் 14 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை அலுவலகத்தில் ஒப்படைக்க முடியும் எனவும் வித்தியாலய அதிபர் எஸ். பூலோகராஜா அறிவித்துள்ளார். (ஜ-5)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 13ஆம்திகதி வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**வவுனியா பிரதேசத்தில்** மாமடுவிலிருந்து பொகஸ்வேவ வரை, பத்தினியார்மகிழங்குளம் கிராமம், மகா கச்சக்கொடிய கிராமம், நெளுக்குளத்திலிருந்து இராஜேந்திரகுளம் வரை, கூமாங்குளத்திலிருந்து அவுசதப்பிட்டிய வரை, CEC கல்லுடைக்கும் ஆலை, ஆண்டியப்புளியங்குளம், வாரிக்குட்டியூர் 4ம் வட்டாரம் ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** உயிலங்குளம், கள்ளிக்கட்டைக்காடு, முதலைக்குத்தி, வட்டுப் பித்தன் மடு, புதுக்காமம், கமலாம்பிகை அரிசி ஆலை ஆகிய பிரதேசத்திலும் மின்சாரம் தடைப் படும்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

உண்மையே நிலையானது. அதன் அளப்பரிய சக்தி பாதுகாப்பளிக்கும் என்பதை உணர்ந்து உண்மை என்ற ஆயுதத்தை எப்போதும் தரித்துக் கொள்ளுங்கள். -பரமானந்தர்

## ஆன்மீகச் சிந்தனைகள்

### கொடுத்து உதவுங்கள்

❖ பாலில் நெய் வெளிப்படுவது போல, உள்ளத்தைக் கடைந்து தியானித்தால் கடவுள் வெளிப்படுவார்.

❖ பெற்றோர் உணவைத் தருவது போல, நல்லாசிரியர் நல்லுணர்வைத் தருகிறார்.

❖ நம்மிடமுள்ள பொருளை அருளாக மாற்ற விரும்பினால், ஏழைகளுக்கு இயன்றதைக் கொடுத்து உதவுங்கள்.

❖ சத்தியத்தைக் காட்டிலும் உயர்ந்த தர்மம் இல்லை. பொய்யைக்காட்டிலும்கொடிய அதர்மம் இல்லை.

❖ கடவுளை நினைக்காத நாள் எல்லாம், நமக்கு உயிர் இருந்தாலும் இல்லாதது போலத் தான்.

# நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



## அமரர்
## சண்முகராசா விபூசன்

**தோற்றம்**
**1992.08.22**

**மறைவு**
**15.07.2020**

எம் உயிரிலும் மேலான அணையாச் சுடராகி எல்லோர் மனங்களிலும் நிறைந்த செல்வன் அமரர் **சண்முகராசா விபூசன்** அவர்களின் திடீர் மறைவினால் தவித்திருந்த வேளையில் நேரடியாக வந்து துயர் பகிர்ந்து எம்மைத் தேற்றியவர்களுக்கும் மரணச் சடங்கில் கலந்து கொண்டு எம் துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் தொலைபேசியினூடாகவும், சமூக வலைத்தளங்கள் மற்றும் பதாதைகள், மலர் வளையங்கள் ஊடாகவும் எமது துயரில் பங்கேற்று துயரை பகிர்ந்து கொண்ட உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் எல்லா வழிகளிலும் உதவி புரிந்தோர்களுக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு 12.08.2020 இன்று புதன்கிழமை நடைபெறவிருக்கும் அந்தியேட்டி கிரியையிலும் 14.08.2020 வெள்ளிக்கிழமை நடைபெறும் வீட்டுக் கிரியையிலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

சேச் வீதி, உரும்பிராய்
கிழக்கு, உரும்பிராய்.

இவரது பிரிவால் துயருறும்
அம்மா, அப்பா மற்றும் குடும்பத்தினர்.

(3552)

## வவுனியாவில்...

முகமாக வவுனியா புதிய பேருந்து நிலைய பகுதிக்குச் சென்றுள்ளார்.

இதன்போது அங்கு தரித்துநின்ற இலங்கை போக்குவரத்து சபையின் மாகோ சாலைக்கு சொந்தமான பேருந்து பின்பகுதி நோக்கி செலுத்தப்பட்டிருந்தது.

இதன்போது பேருந்தின் பின்பகுதியில் நின்றிருந்த முதியவரை மோதித் தள்ளியது.

விபத்தில் படுகாயமடைந்த முதியவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,8,250,299)

## காணாமல் ஆக்க...

தீவு மாணிக்கபுரம் விசுவமடு பகுதியைச் சேர்ந்த 74 வயதுடைய மைக்கல் யேசு மேரி எனும் தாயாரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்

கடந்த 2009ஆம் ஆண்டு மாத்தளன் பகுதியில் குறித்த தாயின் மகனான மைக்கல் ஜோசப் என்பவர் காணாமலாக்கப்பட்ட நிலையில் தன்னுடைய மகனை தேடி தொடர்ச்சியாக முல்லைத்தீவில் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த நிலையில் இவர் நேற்று முன்தினம் சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவில் இந்த தாயாருடன் தமது உறவுகளை தேடிவந்த 18 உறவுகள் உயிரிழந்த நிலையில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3,281)

## முன்னாள்...

தாக்குதலில் அவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு வவுனியாவில் இடம்பெற்றது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

வவுனியா கரிசல்காட்டுப் பகுதியிலுள்ள தமிழ் நலம் மக்கள் அமைப்பின் அலுவலகத்துக்குள் நேற்று முன்தினம் இரவு அத்துமீறி நுழைந்த இனந்தெரியாதோர் முன்னாள் பேராளியான வினோதரன் மீது சரமாரியாக தாக்குதல் நடத்தினர்.

அத்துடன் அலுவலகத்திலிருந்த 50 ஆயிரம் ரூபாய் பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

தாக்குதலால் காயமடைந்த முன்னாள் போராளி அயலவர்களால் மீட்கப்பட்டு அவசர நோயாளர் காவு வண்டி மூலம் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,8,250,299)

## நாட்டின் முழு நிர்...

வாகத்தை இராணுவத்திடம் தாரைவார்ப்பதற்கு சமனானது என கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் கருத்து தெரிவித்த அவர்,

நாடு இராணுவ மயமாவதாக தாம் கூறியபோது அதனை அரசும் அரசுடன் இணைந்த கட்சிகளும் மறுப்பு தெரிவித்ததாகவும் குற்றம் சாட்டினார்.

நாட்டின் சிவில் நிர்வாகத்தை மேற்கொள்ளும் உள்நாட்டு அலுவல்கள் விடயங்கள் தற்போது பாதுகாப்பு அமைச்சின் கீழ் செல்வதானது மிக மோசமான நிலையை ஏற்படுத்தும். அதேவேளை சகல அதிகாரிகளையும் இராணுவம் கட்டுப்படுத்தும் நிலை ஏற்படும் என்றும் சுமந்திரன் சுட்டிக் காட்டினார்.

ஒரு நாட்டின் சிவில் நிர்வாகங்களுடனேயே சர்வதேச நாடுகள் தொடர்பினை பேண விரும்பும் நிலையில் அந்தநிலை தற்போது கேள்விக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேநேரம் இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் கீழ் சிவில் நிர்வாகத்தினை ஒப்படைக்கும் நடவடிக்கைக்கு அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அத்தனை தமிழ் அமைச்சர்களும் பொறுப்பேற்க வேண்டும் என்றும் சுமந்திரன் குறிப்பிட்டார். (ம-3)

## கூட்டமைப்பை...

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து நேற்று கருத்து தெரிவித்துள்ள அவர், கூட்டமைப்புக்கு கிடைத்த தேசியப் பட்டியல் ஆசனம் தமது சம்மதம் இன்றி வழங்கப்பட்டுள்ளது என்பது உண்மை.

ஆனால் அதற்காக கூட்டமைப்பை பிளவுபடுத்த காரணமாக இருக்கப் போவதில்லை எனக் குறிப்பிட்டார்.

தம்மை பகடையாக வைத்து தமிழரசுக் கட்சியின் தலைவரை பிரிக்கலாம் என்ற தவறான எண்ணத்தில் சிலர் இவ்வாறு செய்திகளை பரப்பி வருவதாகவும் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலை இயக்கம் தமிழர்களின் இருப்பிற்கும் விடிவுக்காகவும் செயற்படும் அதேநேரம் தற்போது போன்றே கூட்டமைப்பில் மேலும் பலமாக பயணிக்கும் என்றும் செல்வம் அடைக்கலநாதன் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## ஒருவருக்கு...

வும். அவர்களில் விடத்தல்பளை தனிமைப்படுத்தல் நிலையத்தைச் சேர்ந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும்யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். (ம-3,18)

## கொழும்பில்...

இந்தியாவில் இறந்துவிட்டதாக நம்பப்படும், பிரபல பாதாள உலக குழு தலைவன் அங்கொட லொக்காவின் சகாவான "சொல்டா" என அறியப்படும் அசித ஹேமதிலக என்பவரே சம்பவத்தில் உயிரிழந்தவராவார். (ம-3)

## மேர்வின் சில்வா...

வின் சில்வாவின் மகன் மாலக சில்வா கைது செய்யப்பட்டுள்ளார்.

பத்தரமுல்லை பகுதியைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் அளித்த முறைப்பாட்டுக்கு அமைவாகவே மாலக சில்வாவை கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டிருந்த நிலையில் நேற்றிரவு அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-3)

## தமிழர்களின் ஏக...

சிங்கள தொலைக்காட்சி ஒன்றில் நேற்று முன்தினம் ஒளிபரப்பான அரசியல் நிகழ்ச்சி ஒன்றில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலின்போது யாழ்ப்பாணத்தில் கிடைத்த வாக்குகளை அடிப்படையாகக் கொண்டால் பொதுத் தேர்தலில் எமக்கு ஒரு ஆசனம் கூட கிடைத்திருக்காது என்றே வியூகம் வகுக்கப்பட்டது.

மாற்றுவழி குறித்து மதிநுட்பத்துடன் சிந்தித்தோம். இதன்படி சுதந்திரக் கட்சியில் இருந்து அங்கஜனும் ஈ.பி.டி.பியில் இருந்து டக்ளஸ் தேவானந்தாவும் தெரிவாகியுள்ளனர். ஆகவே எமக்கு இரு ஆசனங்கள் கிடைத்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் அல்ல. அவர்களுடன் எந்தவிதமான பேச்சுக்கும் நாம் தயாரில்லை. அவர்களின் எந்த நிபந்தனையையும் நாம் ஏற்க மாட்டோம் என்றார். (ம-3)

## நீர்வேலியில்...

மல்லாகத்தில் மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நீர்வேலி வடக்கு பகுதியில் உள்ள வீடொன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 4 பேர் கொண்ட கும்பல் 20 வயது மதிக்கத்தக்க யுவதி ஒருவரை கடத்திச் சென்றதாக அவரது பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தனர்.

இதனையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட கோப்பாய் பொலிஸார் மல்லாகம் பகுதியில் வைத்து நேற்று மாலை யுவதியைய்யும் கூட்டிச்சென்ற பிரதான சந்தேகநபரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் கடத்தப்பட்டதாக கூறப்படும் யுவதி குறித்த இளைஞனை நீண்ட நாட்களாக காதலித்து வந்ததாகவும் பெற்றோர் யுவதிக்கு திருமணம் செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு இருந்த வேளை யுவதி வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே இளைஞன் யுவதியை கூட்டிக் கொண்டு சென்றுள்ளார்.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள யுவதியையும் இளைஞனையும் இன்று யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-3)

## தனிமைப்படுத்த...

விரோதமாக வடகடல் பகுதிக்குள் வந்த ஈழ அகதிகள் 4 பேர் யாழ் சிறைச்சாலையில் தனிமைப்படுத்தப்பட்டு இருந்தனர்.

இவ்வாறு தனிமைப் படுத்தப்பட்டு இருந்த நிலையில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் அவர்களில் ஒருவர் நோய் வாய்ப்பட்டு யாழ்போதனா வைத்தியசாலையில் நேற்று காலை அனுமதிக்கப்பட்டார்.

அவ்வாறு அனுமதிக்கப்பட்டவர் நேற்று மதியம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் சிறுநீரக செயலிழப்பு காரணமாகவே உயிரிழந்தார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம-3,8)

## ஜனா...

வின் நிறுவுனர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிங்கள தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப்பான அரசியல் நிகழ்ச்சி நிரல் ஒன்றில் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ம-3)


மஹஜன சம்பத
திகதி 2020/08/11
சீட்டிழுப்பு இலக்கம் 4211
N 3 3 2 4 3 3

தன நிதானய
திகதி - 2020.08.11
சீட்டிழுப்பு இலக்கம் - 301
I 24 41 68 80

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 11-08-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2506
M 20 39 61 78

நீரோகா
திகதி 11/08/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0693
சிம்மம் 16 47 49 52

மெகா பவர்
திகதி 11/08/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0578
U 25 16 44 65 80

சீட்டிழுப்பு வாரம் 610
11.08 2020
V 08 13 69 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 80,180,520
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 1007
வர்ணம்: இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.08.11
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 59,749,325/-
25 29 48 65 L

ராசி அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2888
வர்ணம் சிவப்பு
திகதி 11.08.2020
வெற்றி இலக்கங்கள் 23 30 50 56 தனுசு
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 2,185,595
தொ.பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1679
சீட்டிழுப்பு திகதி 11/08/2020
வெற்றி இலக்கங்கள் 48 50 53 60 Z
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 51,867,640
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

# முன்னணியின் வேட்பாளருக்கு அம்பாறையில் வாள்வெட்டு

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்ட வேட்பாளர் கோகுலராஜ் வாள் வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளார். நேற்று காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்துள்ள அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த தாக்குதலுக்கு கண்டனம் வெளியிட்டுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இணைப்பாளர்கள், தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்து வரும்தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரை, கிழக்கில் ஒடுக்குகின்ற நடவடிக்கையில் குழு ஒன்று ஈடுபடுவதாக குற்றம் சாட்டியுள்ளனர். (ம-3)


**கணக்கீடு** பிரத்தியேக வகுப்பு
புதிய பிரிவு
புதிய அலகு ஆரம்பம்
**A/L 2019 Day**
கம்பனி மீட்டல் நாளை 6 P.M
**A/L 2021**
பங்குடமை நாளை 5 P.M
**A/L 2022**
ஆரம்ப அலகிலிருந்து வெள்ளி 5 P.M
**A/L 2019 Day**
கருத்தரங்கு வெள்ளி 6 P.M
**S. தவா**
(3557)
இல. 17, பிரம்படி ஒழுங்கை, கொக்குவில்
T.P : 077 239 5858

**DMI** ஸ்ரான்லி வீதி, யாழ்.
இறுதிச் சந்தர்ப்பம்....
A/L - 2020, A/L - DAY
பௌதிகவியல் N.BABU
(C-024)
அலகுரீதியான துரித மீட்டல் வகுப்பு
• திங், செவ், வியாழன் - 6.15 a.m
• சனி, ஞாயிறு - 10 a.m, 12 p.m
புதிய அனுமதி உண்டு

**சிங்களம்**
மாணவர்கள் உட்பட
அனைத்து தரப்பினர்களுக்கும்.
ஆரம்பம் : 2020.08.15 - பி.ப 2.00 மணி
ஆரியகுளம் சந்தி DMI க்கருகில்
வீடுகளுக்கும் வந்து கற்பிக்கப்படும்.
(3547)
H.P : 070 141 7834

**விரைவு பொதிகள் சேவை**
**V2 TRAVELS**
வழமைபோல வெளிநாடுகளுக்கு
பொதிகளை எமக்கூடாக
அனுப்பிவைக்க முடியும்
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-006)
0768226240

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
**றாஜ் நகை மாடம்**
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(3551)

**முக்கிய அறிவித்தல்**
**இணுவில் மக்லோட் வைத்தியசாலை**
கருவள சிகிச்சை (IVF) முற்று முழுதாக நீங்கள் எமது வைத்தியசாலையில் பெற்றுக் கொள்ளலாம்.
**நீங்கள் பெறக்கூடிய நன்மைகள்**
- அதிகூடிய கருத்தங்கல் வீதம் எங்கள் வைத்தியசாலையில்
- சிறந்த அனுபவம் வாய்ந்த Embryologist.
- மிகக் குறைந்த மொத்தச் செலவு.
- இயற்கையான சூழலில் சிறந்த அனுபவம்மிக்க VOG இன் நேரடிக் கண்காணிப்பில் சிகிச்சை மேற்கொள்ளப்படும்.
- குழந்தையின்மைக்கான சிகிச்சை, செயற்கை கருக்கட்டல், கருவள சிகிச்சை (IVF) மற்றும் பெண் நோயியல், கற்பவதிகளுக்கான விஷேட வைத்திய ஆலோசனைகள் வைத்திய நிபுணர்களால் (VOG) தினமும் மாலை 4.00 மணிக்கு வழங்கப்படுகின்றது.

16.08.2020 காலை 8.00 மணிக்கு கொழும்பில் பிரசித்திபெற்ற கருவள சிகிச்சை (IVF) வைத்தியர் Dr.H.ரத்தினாயக்கா வருகை தருகின்றார்.
(C-023)
முற்பதிவுகளுக்கு
021 224 1569, 021 224 3648,
076 394 4346

**மீண்டும்**

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை**
அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும்
100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது.
(C-009)
**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113
**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536


**போட்டிப் பரீட்சை மாலைநேர வகுப்புக்கள்**
முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்
(MSO OPEN & Limited)
புகையிரத நிலைய அதிபர் (SM)
செவ்வாய், வியாழன்
ஆரம்பம்
வியாழன் (13/8)
3.00 p.m - 6.00 p.m
MSO Limited.
4.45p.m - 7.00p.m
(C-027)
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதியில் BOC ATM எதிரே )
076 688 3394

**E-CITY COLLEGE OF ENGLISH**
புதிய பாடநெறிகள் ஆரம்பம் 15.08.2020
➤ Diploma in English (காலை 10.30 - 01.00 p.m)
➤ Business English / Advanced English Diploma (08.00 - 10.00 மணி)
➤ Diploma in Computer Applications (8.00 - 10.00 மணி)
➤ IELTS (3.00 - 5.30 p.m)
➤ IELTS LIFE SKILLS A1 (10.30 - 12.30 p.m)
(C-020)
**ஆரம்பம் : 15.08.2020 சனிக்கிழமை**
ஈ-சிற்றி ஆங்கிலக் கல்லூரி
இல. 320/3. பருத்தித்துறை வீதி. ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம்.
[ஆனைப்பந்தி உப தபால் நிலையம் அருகில்]
021 221 7106, 077 340 0418, 077 061 5242, 077 492 4166
www.ecitycollege.lk

**NORTH LANKA IIT CITY CAMPUS**
**Faculty of Agriculture - Kariyalai Nagapaduvaan**
**விவசாய ஆராய்ச்சி நிலையமும், பயிற்சி மாதிரிப் பண்ணையும்**
பூநகரியை சார்ந்த மாணவர்களுக்கு விவசாயத்துறையில் பட்டம் பெறுவதற்கான அரிய சந்தர்ப்பம்!
பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டச் சான்றிதழ்.
# கற்கைநெறி - B.Sc in Agriculture Science
# தகைமை - A/L
# காலம் - 3 வருடங்கள்
# நேரடி செய்முறைப் பயிற்சி
விண்ணப்ப முடிவுத் திகதி 20.08.2020
ரூபா 200000 வரையிலான புலமைப் பரிசில்!
மிகக் குறைந்த கட்டணம்.
வகுப்புக்கள் யாவும் விவசாயத்தில் (Ph.D) கலாநிதி பட்டம் பெற்ற விரிவுரையாளர்களால் நடாத்தப்படும்.
விபரங்களுக்கும், விண்ணப்படிவங்களுக்கும்.
Rector - 076 750 4535 பூநகரி சங்கீதா - 076 428 4134
(C-026)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.